பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 19 | ஞாயிற்றுக்கிழமை | 05.10.2025 | அதிர்வு 065

## கோர விபத்தில் இளைஞர், யுவதி பரிதாப மரணம்!

விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவரும் யுவதி ஒருவரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். 06

# நீதிமன்றம் செல்வதற்கு தயாராகவே உள்ளோம்!

## எதனையும் மறைக்கும் தேவை எமக்கு இல்லை; அநுர அரசாங்கத்துக்கு நாமல் எம்.பி. பதிலடி



“எங்களுக்கு எதனையும் மறைக்க வேண்டிய தேவையில்லை. நீதிமன்றத்துக்குச் செல்வதற்கும் தயாராகவே உள்ளோம்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 06

# பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடைய எந்த அரசியல்வாதிகளும் தப்பவே முடியாது!

## அவர்களைச் சிறையில் அடைத்தே தீருவோம் என அநுர அரசு சூளுரை

“இந்தோனேஷியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட பாதாள உலகக் குழு சந்தேகநபர்களிடமிருந்த 31 தொலைபேசிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய இவர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் எவராக இருந்தாலும், எவ்வித பாகுபாடும் இன்றி அவர்கள் கைது செய்யப்படுவார்கள். சிறை வாழ்க்கையில் இருந்து அவர்கள் தப்பவே முடியாது.”

– இவ்வாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“பொலிஸார் தமக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் மற்றும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டே விசாரணைகளை முன்னெடுத்து சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். எனவே, அரசியல் பழிவாங்கலை முன்னெடுப்பதற்கான எந்தவொரு 06






இலங்கையின் இரண்டு தமிழ் தலைவர்கள் இலங்கையின் தற்போதைய அரசுக்கு சுட்டி இருக்கும் இரண்டு செய்திகளை இன்று குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

ஒன்று – இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண சபையின் ஒரே முதலமைச்சராக விளங்கிய வரதராஜப் பெருமாள் கொழும்பு நாளிதழ் இணையத்துக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருக்கும் விடயம்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துவதற்காக சுமந்திரன் சமர்ப்பித்த சட்டமூலத்தை மூன்றாவது வாசிப்பு மட்டத்திலும் ஆதரிக்கத் தயாராக இருந்த – அதை நடைமுறைக்கு கொண்டு வர முயற்சித்த – அதற்கு வெளிப்படையாக இணங்கிய – தேசிய மக்கள் சக்தி, இப்போது சாணக்கியன் முன் வைத்திருக்கும் அதே சட்ட மூலத்தை முன் நகர்த்தி, விடயங்களை மேற்கொண்டு செல்வதற்கு ஏன் இப்போது ஆளுந்தரப்பாக இருந்து பின்னடிக்கின்றது என்று கேள்வி எழுப்பியுள்ள அவர், 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# வடக்கு மாகாணத்தை அநுர அரசாங்கத்தின் காலத்திலேயே அபிவிருத்தி செய்ய முடியும்!

## குறிகாட்டுவான் நிகழ்வில் ஆளுநர் தெரிவிப்பு

“தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது சொல்லில் அல்ல செயலில் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று நம்புகின்றேன்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொதுமக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் “மறுமலர்ச்சிக்கான பாதை“ திட்டத்தின் கீழ் “குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான மறுசீரமைப்பு வீதிக் கட்டுமானத்தின்” ஆரம்ப நிகழ்வும் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு என்பன குறிகாட்டுவானில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய ஆளுநர்,

“வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளருடன் கதைக்கும்போது அடிக்கடி ஓர் விடயத்தைக் கூறுவார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தத் துறையின் அமைச்சராக இருக்கும்போது வடக்குக்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். அமைச்சர் பிமல் ரத்நாயக்க எந்தத் திட்டம் வரும்போதும் அதில் வடக்கு மாகாணத்தையே முதன்மைப்படுத்துவார் என்று அவர் கூறுவார். அது உண்மை.

நான் யாழ். மாவட்ட செயலராக இருந்தபோது குறிகாட்டுவான் வீதிப் புனரமைப்பு மற்றும் இறங்குதுறை புனரமைப்புக்கு கடுமையாக முயற்சித்தேன். ஆனால் அது கைகூடவில்லை. இப்போதுதான் சாத்தியமாகியிருக்கின்றது. இது மிகச் சிறப்பான தருணம். இந்த அரசாங்கம் சொல்லில் அல்ல செயலில் நிரூபித்து வருகின்றது. வடக்கு மாகாணத்தில் நிறைய மாற்றங்கள் நிகழ்கின்றன.

பல அமைச்சர்கள் வடக்கு மாகாணம் தொடர்பான விடயங்களை சாதகமாகவே அணுகுகின்றார்கள். அது எமது வடக்கு மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். இவற்றுக்கு மேலாக, நெடுந்தீவு பிரதேசத்துக்கே உதவி அரசாங்க அதிபராக முதலில் நியமிக்கப்பட்டேன். அந்தப் பிரதேச மக்களின் வலிகள் தெரியும். அந்தப் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது சிறப்பானது. இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் இந்த அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்படும்.” – என்றார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.றஜீவன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாணப் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர்கள், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

வீதி அபிவிருத்திப் பணி 299 மில்லியன் ரூபா செலவில் முதல் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதேநேரம், 800 மில்லியன் ரூபா செலவில் குறிகாட்டுவான் இறங்குதுறையும் மறுசீரமைக்கப்படவுள்ளது. அத்துடன், குறிகாட்டுவான் வரையிலான பிரதான வீதியில் 3.2 கிலோ மீற்றர் அடுத்த ஆண்டு புனரமைக்கப்படவுள்ளதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் கௌரவ அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்தமையும் குறிப்பிடத்தக்கது.





### பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும்

# மிகவும் பாரதூரமான சட்டத்தை கொண்டுவர அநுர அரசு திட்டம்

## ஐக்கிய சோஷலிசக் கட்சி குற்றச்சாட்டு

"பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டாலும் அதைவிடவும் மிகவும் பாரதூரமான சட்டமொன்றை கொண்டுவருவதே அரசின் திட்டமாக உள்ளது."

– இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம் தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிமொழியை மறந்துவிட்டே அரசு செயற்படுகின்றது. ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம் பற்றி அதிகளவில் பேசப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைத் திசை திருப்பும் நோக்கிலேயே இவ்வாறு செயற்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டாலும், அதைவிட மிகவும் பாரதூரமான சட்டமொன்றைக் கொண்டு வருவதற்கே ஆளுங்கட்சி முற்படுகின்றது.

மன்னாரில் மக்கள் எழுச்சி ஏற்பட்டுள்ளது. அதாவது சிறிய நேபாளமாக மன்னார் மாறியுள்ளது. இவ்வாறான மக்கள் எழுச்சிகளை ஒடுக்குவதாக இருந்தால் ஆளுங்கட்சிக்கு அடக்குமுறை என்பது அவசியம். அதனால்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விடவும் பாரதூரமான சட்டத்தை கொண்டுவர முற்படுகின்றனர்.

அதேவேளை, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆளுங்கட்சி மௌனம் காக்கின்றது. எல்லை நிர்ணய விவகாரத்தைக் காண்பித்து இழுத்தடிப்பு இடம்பெறுகின்றது. கிரிக்கெட் மைதானத்தை அமைத்து வடக்கு மக்களை ஏமாற்ற முடியாது." – என்றார்.



# பருத்தித்துறையில் எலி எச்சத்துடன் உணவுப் பொருள்கள் விற்பனை

## பல்பொருள் வாணிபத்திற்கு 60,000 ரூபா தண்டம்

(இரா.மயூதரன்)

எலி எச்சங்களுடன் கூடிய உணவுப் பொருள்களையும், பூஞ்சணம் மொய்த்த உணவுப்பொருள்கள் உள்ளிட்ட பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்த பல்பொருள் வாணிபத்திற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 60,000 ரூபா தண்டப் பணம் அறவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதியில் செயற்பட்டு வரும் பல்பொருள் வாணிபம் ஒன்றிற்கே இவ்வாறு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

மேற்படி பல்பொருள் வாணிபத்தில் மேற்குறித்த வகையிலான உண்வுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களின் முறைப்பாட்டினை அடுத்து பருத்தித்துறை நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஸினால் அண்மையில் சோதனை மேற்கொள்ளப்படிருந்தது.

இதன்போது மேற்படி விடயம் உறுதி செய்யப்பட்டு பல்பொருள் வாணிபத்திற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது, மேற்படி பல்பொருள் வாணிபத்தினது முகாமையாளர் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் 60,000 ரூபா தண்டப்பணம் நீதிமன்றினால் அறவிடப்பட்டது.

# கீரி சம்பா அரிசியை பதுக்கி வைக்க முயற்சி

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு கீரி சம்பா அரிசியை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் நிலை உருவாகியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு கீரி சம்பா அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கீரி சம்பா அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்து அரிசிக்கான தட்டுப்பாட்டை உருவாக்க ஒரு தரப்பு முயற்சித்து வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாணந்துறையில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் 300 ரூபாவுக்கு ஒரு கிலோ கிராம் அரிசியை விற்பனை செய்த வர்த்தகருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஹொரணையில் கீரி சம்பா அரிசியை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்த வர்த்தகருக்கு இரண்டு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், அவரிடம் இருந்து 5 கிலோகிராம் எடையுடைய 25 அரிசி பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.



# வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை

(இரா.மயூதரன்)

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் மற்றும் மனித நுகர்வுக்கு ஒத்துவராத உணவுப் பொருள்கள் விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 160,000 ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் செயற்பட்டுவரும் உணவகம் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத உணவகம் ஒன்றிற்கும், காலாவதி கடந்த உணவுப் பொருள்களை விற்பனைக்கு வெளிக்காட்டியமை, தூசு படிந்த நிலையில் உணவுப் பொருள்களை விற்பனைக்கு வெளிக்காட்டியமை மற்றும் எலி எச்சங்களுடன் உணவுப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இரு பல்பொருள் வாணிபத்திற்கும் எதிராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொது சுகாதார பரிசோதகர் ப. தினேஸினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கானது நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் உணவகத்திற்கு 50,000 ரூபா தண்டப்பணமும் பல்பொருள் வாணிபத்திற்கு முறையே 40,000 ரூபா, 10,000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

இதே போன்று, மனித நுகர்விற்கு ஏற்றதல்லாத உணவுப் பொருட்களை விற்பனை செய்த வாணிபத்திற்கு 60,000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குழந்தைகளைப் பாதுகாப்போம்!

நாட்டில் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் இந்த ஆண்டில் ஜனவரி 1 முதல் ஜூலை 31 வரை குழந்தைகள் தொடர்பான 5,461 முறைப்பாடுகளைப் பெற்றதாக அறிவித்துள்ளது. இவற்றில், 4,501 முறைப்பாடுகள் ஆணையம் தொடர்பான சட்டத்தின் விடயத்துக்கு உட்பட்டவை.

இவற்றில் 44 முறைப்பாடுகள் பதின்ம வயதுக் கர்ப்பங்கள் சம்பந்தமானவை. 141 கடுமையான பாலியல் துஷ்பிரயோகம், 330 பாலியல் துன்புறுத்தல் மற்றும் 32 பாலியல் பலாத்கார வழக்குகளையும் ஆணையம் இக்காலப் பகுதியில் பெற்றுள்ளது. அதிகபட்ச எண்ணிக்கையிலான விடயங்கள் - 1,126 முறைப்பாடுகள் - குழந்தைகளைக் கொடுமைப்படுத்தலுடன் தொடர்புடையவை. மற்றவற்றில் 125 குழந்தை கடத்தல் விவகாரங்கள், 82 குழந்தை தொழிலாளர் புகார்கள், 81 சைபர் வன்முறை முறைப்பாடுகள் மற்றும் 10 சுய தீங்கு விளைவிக்கும் வழக்குகள் அடங்கும். கூடுதலாக, 63 புகார்கள் போதைப்பொருள் குற்றங்கள், மூன்று குழந்தை திருமணங்கள் மற்றும் ஒன்று கடத்தல் தொடர்பானவை.

ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை 5,461 ஆக இருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை தற்போது எட்டாயிரத்தைத் தாண்டியிருப்பதாக ஆணையத்தின் அதிகாரி நிலந்தி புஷ்பகுமாரி தெரிவித்திருக்கின்றார்.

“நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையின் பாதுகாப்பையும் நலவாழ்வையும் உறுதி செய்வதற்கான ஒரு தேசிய கட்டமைப்பை நிறுவுவதே இலங்கையின் தேசிய குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கையின் நோக்கம். குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்க தேவையான சட்ட, சமூக மற்றும் நிறுவன சீர்திருத்தங்களுக்கு இந்தக் கொள்கை ஓர் அடித்தளமாக செயல்படுகிறது. குழந்தை உரிமை மீறல்களுக்கு பதிலளிப்பதற்கு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இலங்கையில் வழிமுறைகள் இருந்தாலும், ஒருங்கிணைப்பு மற்றும் சரியான செயல்படுத்தல் இல்லாதமை ஒரு பெரிய தடையாக உள்ளது” - என்று அவர் கூறினார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பட்டயச் சட்டம் உலகளவிலும் மற்றும் உள்நாடு அளவிலும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் பங்களிப்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு வலைத்தளங்களில் குழந்தைகளின் ஒரு லட்சம் நிர்வாணப் படங்கள் கண்டறியப்பட்டுள்ளன எனவும் ஆணையத்தின் அதிகாரிகள் மேலும் தகவல் வெளியிட்டனர்.

ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் ஒட்டுமொத்த பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு உறுதி செய்யப்படுவதோடு தீங்கு, வன்முறை, சுரண்டல், துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்படவும் வேண்டும் என்று ஆணையம் வலியுறுத்துகிறது.

இலங்கையில் குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் விடயங்கள் தொடர்பாக முறைப்பாடளிக்க ‘சைல்டுலைன்’ என்ற தொலைபேசிச் சேவை விசேடமாக உள்ளது. ‘1929’ என்ற இலக்கத்தின் மூலமாகவும், எந்தவொரு தொலைத்தொடர்பு வழங்குநர் மூலமாகவும், நாட்டின் எங்கிருந்தும், நாளின் எந்த நேரத்திலும், வாரத்தின் எந்த நாளிலும், சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் இலவசமாகத் தொடர்பு கொண்டு விடயங்களை முறையிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற போது ஒரு பேச்சு, ஆளும் தரப்பாக மாறியதும் வேறு நிலைப்பாடு என்ற இரட்டை வேடத்தில் தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றதா என்று கேள்வி எழுப்பியுள்ளார். அப்படி இல்லை என்று நிரூபிப்பதற்கு எதிரணியில் இருந்த போது இந்த விவகாரம் தொடர்பாக தான் எடுத்த தெளிவான நிலைப்பாட்டை, இப்போது ஆளும் தரப்பாக – அரசாக – அது முற் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் வெளிப்படையாகக் கோரியிருக்கின் றார்.

அது மட்டுமல்ல, இந்த அரசாங்கம் தன்னை இனவாத அரசு அல்ல என்று திரும்பத் திரும்ப சுய தம்பட்டம் அடிக்கின் றது. அது உண்மை என்று நிரூபிப்ப தாயின் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை பரவலாக்கிய மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தித் தன்னை இனவாத அரசு அல்ல என்பதை நிரூபிக்க வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டி சவால் விட்டிருக்கின் றார்.

உண்மைதான்.

அமைச்சர் சந்திரசேகரனும் அவரது கம்பெனி எம்.பிக்களும் வடக்கிலும் கிழக்கிலும் சுற்றுச்சுழன்று தாங்கள் தூக்குக் காவடி தூக்குவது இனவாத அரசுக்கு அல்ல என்று சுயபடம் காட்டுகின் றனர். செயலில் அதை நிரூபிக்க இது நல்லதொரு வாய்ப்பு. நேரடியாக இந்த விடயத்திற்கு – வரதராஜப்பெருமாளின் சவாலுக்கு – பதில் கூற வேண்டிய கடப் பாடு சந்திரசேகரனின் கட்சிக்கு இப்போது உள்ளது. கொழும்பு ஆட்சிப் பீடத்திற்கு வடக்கில் தூக்குக் காவடி தூக்கும் கூத் தாடி வேலையை சற்றுத் தள்ளி வைத்து விட்டு, மாகாண சபைத் தேர்தல் தொடர் பில் திட்டவட்டமான – தெளிவான பதிலை – அடுத்த வருடம் என்று அதை ஒத்தி வைத்து இழுத்தடிக்கும் நாடகத்தை முடிவுக்கு கொண்டு வந்து – மக்க ளுக்கு அளிக்க வேண்டும்.

அடுத்தது – தமிழ்நாட்டில் நடைபெறும் ஒரு விவகாரத்தை ஒட்டி இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கி யன் குறிப்பிட்டுள்ள ஒரு விடயம்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரச் செய்வதற்கான – கவருவதற்கான – நகர வீதியுலா திருவிழா நிகழ்ச்சிகளை சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் இலங்கைத் தூதரகம் நடத்துகின்றமையை வரவேற்றுள்ள சாணக்கியன், அது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு சில விட யங்களை எக்ஸ் தளச் செய்தி மூலம் நினைவூட்டியிருக்கின்றார்.

'இந்த முயற்சி இன்னும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இரு தரப்பு மேம்பட்ட இணைப்பு செயற்பாடு அவசியம். நேரடி விமான சேவைகள் மற்றும் மலிவான கடல் வழி இணைப்புகள் போன்றவை மட்டுமல்லாமல், பிராந்திய ரீதியில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் நில இணைப்பு விருப்பங் களை ஆராய்வதும் அவசியம். இந்தியச் சுற்றுலாப் பயணிகளுக்கு மிக வசதியான – குறுகிய தூர – இடமாக இலங்கை யில் சுற்றுலாப் பயணங்களுக்கான மையங்கள் இருக்கின்றன. இவ்விட யத்தில் அதிக திறனையும் எளிதான அதிக அணுகலையும் ஏற்படுத்துவது அவசியம்' – என்றும் சாணக்கியன் சுட்டிக்காட்டி உள்ளார்.

ஆயினும், இந்த விடயங்கள் ஊடாக சில உண்மைகளை வெளிப்படையாக இல்லாமல், உட்கிடையாக, இலங்கை அரசுக்கும் அதன் வெளி விவகார அமைச்சருக்கும் சாணக்கியன் 'சாணக்கி யமாக' நினைவுப்படுத்தி இருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது.

இலங்கைக்கு இந்திய சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவரும் விதத்தில் பலாலி சர்வதேச விமான தளத்தையும் காங்கேசன்துறை துறை முகத்தையும் மேம்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா தானாகவே விரும்பி நன்கொடையாக உதவி அளிக்க முன்வருகின்றது. ஆனால், பேரினவாத சிந்தனையில் – தமி ழர் தாயகமான வடக்கு மையங்கள் மேம் பட்டு விட அனுமதித்து விடக் கூடாது என்ற மேலாதிக்க அடக்குமுறைப் போக்கி னால் – அந்தத் திட்டங்களுக்கு இலங்கை யில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், விமான சேவைகள் அமைச்சர் முட்டுக் கட்டை போட்டு வருகின்றார் என்பதை இந்த செய்தியில் சொல்லாமல் சொல்லி இருக்கிறார் சாணக்கியன் என்று தோன் றுகின்றது.

இந்திய சுற்றுலாப் பயணிகள் தங்கள் நாட்டுக்கு மிக அருகில் உள்ள இலங்கையின் வடக்கு வாயில்கள் வழியாக இலங்கைக்குள் வருவதற் கான வாய்ப்பை மூடி அடைத்து கொண்டு, சென்னையிலும் கோயம்புத்தூரிலும் மதுரையிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கவர்வதற்கான வீதி உலா திருவிழாக்களை நடத்துவதில் என்ன அர்த்தம் உண்டு, அது அபத்தமல்லவா என்று சாணக்கியன் நையாண்டியாக கேட்டிருக்கிறார் போலும்.

சாணக்கியனும் வரதராஜப்பெரு மாளும் சுட்டிக்காட்டும் விடயங்கள் தேசிய மக்கள் சக்தி ஆளுந்தரப்பினருக்கு விளங் கினால் சரி.

---

## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து ஹொரணை – மொரகஹ ஹேன வீதியில் கதன்வில விகாரைக்கு அருகில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும் லொறியும் ஒன் றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கி ளில் பயணித்த இளைஞரும் யுவதியும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இரு வரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மொரகஹஹேன பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதி யும், 24 வயதுடைய இளைஞனும் ஆவர்.

இந்த விபத்து தொடர்பில் ஹொரணை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

---

## பாதாள உலகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேவையும் எமக்கு இல்லை. நீண்ட காலமாக இழக்கப்பட்ட நீதி தற்போது வழங் கப்பட்டு வருகின்றது.

மக்களால் பல்வேறு தரப்பினர் மீது குற் றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை குறித்த விசாரணைகளும் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாளாந்தம் புதுப்பிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் தெரிவிக் கும் போது, அவற்றுக்கு எதிர்க்கட்சியினர் பதிலளிக்க முற்படுகின்றனர். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை அவர்கள் அரசியல் பழிவாங்கல் எனச் சித்தரிக்கின்றனர்.

அண்மையில் இந்தோனேஷியாவிலி ருந்து அழைத்து வரப்பட்ட பாதாள உலகக் குழு சந்தேகநபர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய அவர்களிடமி ருந்த 31 தொலைபேசிகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான அறிக்கைகளும் கிடைத்த வண்ணமுள்ளன. இவற்றுடன் அரசியல்வாதிகள் தொடர்புபட்டிருந்தால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப் பதற்கு நாம் பின்வாங்கப் போவதில்லை.

இவர்களுடன் எந்தத் தொடர்பும் இல் லாதவர்கள் அச்சமடையவோ–பதற்றமடை யவோ தேவையில்லை. மாறாக குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக எவ்வித பாகுபாடும் இன்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றார்.

---

## நீதிமன்றம் செல்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நல்லாட்சி காலத்தில்தான் சட்டத்தை வளைத்தார்கள் என்று நினைத்தோம். ஆனால், இந்த அரசு இன்னும் அதிக மாகச் சட்டத்தை வளைத்துக் கொண் டிருக்கின்றது போலத் தெரிகின்றது.

எங்களுக்கு மறைக்க ஒன்றும் இல்லை. நீதிமன்றத்துக்கு அழைத்தால் செல்வோம். பொலிஸாரோ , நிதிக் குற்ற வியல் விசாரணைப் பிரிவோ, குற்றப் புல னாய்வுப் பிரிவோ எங்கென்றாலும் செல்வோம்.

ஆனால், இன்று பலர் இலங்கையி லேயே இல்லை. மத்திய வங்கி மோச டியை விசாரிக்க வந்த அரசு, இப் போது அவர்களை மீண்டும் அழைத்து வர ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கின்றது. அந்த நிலை– லக்கு அவர்கள் வந்துவிட்டார்கள். எங்க ளுக்கு மறைக்க ஒன்றும் இல்லை. நியா யமான விசாரணைக்கு எப்போதும் தயா ராக இருக்கின்றோம்.

அரசின் ஊடகப் பேச்சாளர் கேள்விக ளுக்குப் பதில் சொல்ல முடியாமல் போ னால், 15 வருட பழைய விடயங்களை எடுத்துக்கொள்கின்றார். அவருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன், நீங்கள் தான் இப்போது அரசு. அதை லால் காந்த மாத்திரம் புரிந்து கொண்டார்.

நீதிமன்றத்தில் சொல்ல வேண்டிய விடயங்களை பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் ஊடகத்தில் சொல்கின்றார். ஏதேனும் சம்பவம் நடந்தால், அதில் நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆனால் இன்று பொலிஸும் அரசும் சேர்ந்து போலிச் சாட்சிகளை உருவாக் குகின்றார்கள்." – என்றார்.

# பிறந்த ஆண் சிசு ஒன்று வடிகானில் இருந்து மீட்பு!



மாத்தளை, பிடகந்த தோட்டத்தில் உள்ள பழைய தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள வடிகானில் பிறந்த ஆண் சிசு ஒன்று வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கந்தேனுவர பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சிசு மீட்கப்பட்டது.

சிசு, மாத்தளை பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிசுவின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

கந்தேனுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யும்

## பல பகுதிகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை



வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், குருநாகல், மாத்தளை மாவட்டங்களின் சில இடங்களிலும் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யலாமென எதிர்வுக்கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த சிவப்பு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன்கூடிய மழைபெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் என்பதுடன் மின்னல் தாக்கங்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வடமத்திய, கிழக்கு, மத்திய, ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் எனவும் கடற்பிராந்தியங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் எதிர்வுக் கூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் கடற்பிராந்தியங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதுடன் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால் அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளுக்கு முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பதுளை, குருணாகல், மாத்தளை, மொனராகலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு முதலாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.




## கிளிநொச்சி - தட்டுவன்கொட்டியில்

# கண்ணிவெடி அகற்றும் பணியை மீண்டும் முன்னெடுக்குமாறு மக்கள் வேண்டுகோள்!

கிளிநொச்சி – தட்டுவன்கொட்டி பகுதியில் மீண்டும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தட்டுவன்கொட்டிப் பகுதியில் அண்மையில் வெடிபொருள்களைக் கையாண்ட இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அத்துடன், மேலும் சில இடங்களிலும் வெடிபொருள்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே, அங்கு மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளை மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:–

“போரின் பின்னர் மீளக் குடியமர்த்தப்பட்டு கடந்த 15 வருடங்களாக நாங்கள் இங்கு வசித்து வருகின்றோம். இந்த இடைப்பட்ட காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்ணிவெடிகள் அவதானிக்கப்பட்டு, அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, பின்னர் அவை மீட்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் விளையாடுவதற்காக வெளியில் செல்லும்போதுகூட அச்சமான சூழலுக்குள்ளேயே அனுப்பி வைக்க வேண்டியுள்ளது. எனவே, இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு, தட்டுவன்கொட்டியில் மீண்டும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும்.” என்றனர்.

# நிறைவேற்று அதிகாரத்தை தற்போது நீக்க வேண்டாம்!

## முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ வலியுறுத்து



“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தற்போது நீக்கப்படக்கூடாது. இது தொடர்பில் அரசிடம் கோரிக்கை முன்வைக்கின்றேன்.”

– இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தற்போது நீக்க வேண்டாம் என அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். ஏனெனில் நிறைவேற்று அதிகாரத்துக்கு உரிய தேவை இலங்கையில் உள்ளது. அந்த அதிகாரம் இல்லாவிடில் அரசின் இருப்பு ஆட்டம் கண்டுவிடும்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய முன்னேற்றங்களைக் கருத்தில்கொண்டு இது தொடர்பில் மறுபரிசீலனையில் ஈடுபடலாம்.” – என்றார்.

# பா.ஜ.க. தமிழக வளர்ச்சியை கபளீகரம் செய்ய பார்க்கிறது

## முதல்வர் ஸ்டாலின் பேச்சு

“வரலாறு காணாத வகையில், வளர்ச்சிப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். இதை திராவிடத்துக்கு எதிரான பா.ஜ.கவும், திராவிடம் என்றால் என்னவென்றே தெரியாது என்று சொன்ன பழனிசாமியின் அ.தி.மு.கவும், மீண்டும் கபளீகரம் செய்யலாம் என்று பார்க்கிறார்கள்.”

– இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகரில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய முதல்வர் ஸ்டாலின்,

“இந்த நூறாண்டுகளில், கொஞ்சம் கொஞ்சமாக நம்முடைய மக்களுக்கு கிடைத்ததை, வேக வேகமாக பறிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். சுயமரியாதை இயக்கம் தேடித் தந்த உயர்வை பறிக்கின்ற சூழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அறிவியலை பின்னுக்குத் தள்ளி, பிற்போக்குத்தனங்களையும், ஆதிக்கத்தையும் மீண்டும் நிலைநிறுத்துவதற்கான சூழ்ச்சி நடைபெற்று கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்திய நாட்டையே ஒரு நூற்றாண்டுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்ல நுணுக்கமாகவும், தீவிரமாகவும் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் தடுத்து நிறுத்துகின்ற அரண்தான், திராவிட மொடல். அடுத்து, திராவிட மொடல் 2.0 என்று சொல்லப் போகிறோம். வரப் போவது அரசியல் தேர்தல் கிடையாது தமிழினம் தன்னை காத்துக் கொள்ள வேண்டிய சமுதாய தேர்தல்.

கொள்கையற்ற அ.தி.மு.கவினால் பத்தாண்டுகள் பாழான



தமிழ்நாட்டை மக்களின் ஆதரவுடன் மீட்டெடுத்து, இந்த நான்கு ஆண்டுகளில் வளப்படுத்தியிருக்கிறோம். வரலாறு காணாத வகையில், வளர்ச்சிப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். இதை திராவிடத்துக்கு எதிரான பா.ஜ.கவும், “திராவிடம் என்றால் என்னவென்றே தெரியாது” என்று சொன்ன பழனிசாமியின் அ.தி.மு.கவும், மீண்டும் கபளீகரம் செய்யலாம் என்று பார்க்கிறார்கள்.

தமிழ்நாட்டை நாசப்படுத்தத் துடிக்கும் கூட்டத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தவேண்டும். அதற்கான கொள்கை தெளிவும், போராட்டக் குணமும், செயல்திட்டமும், ஒற்றுமை உணர்வும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்குதான் இருக்கிறது. எனவே, ஏழாவது முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்திட, இந்தக் கூட்டணியின் வெற்றிக்கு நீங்கள் எல்லோரும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# கரூரில் ஒரு வாரத்துக்குப் பின்னர் த.வெ.க. சார்பில் நேரில் ஆறுதல்







கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் உத்தரவின் பேரில், உயிர் இழந்தவர்கள் குடும்பத்தினரை முதன்முறையாக த.வெ.க. கரூர் மாவட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து வருகின்றனர்.

கரூரில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பிரசாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். ஏற்கெனவே, உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்களை கரூர் மாவட்ட நிர்வாகிகள் சேகரித்து, அந்தப் பட்டியலை தமிழக வெற்றி கழகத்தின் தலைமைக்கு அனுப்பி வைத்த நிலையில், தற்போது பாதிக்கப்பட்டவர்களைவிஜய்உத்தரவின்பேரில்த.வெ.கவினர் நேரில் சந்தித்து வருகின்றனர்.

மேலும், விரைவில் கட்சியின் தலைவர் விஜய் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவிக்க இருக்கின்றார் எனவும் உரிய உதவிகள் செய்து தருவார் என உறுதி அளித்து வருகின்றனர். இந்த சந்திப்புகளின்போது த.வெ.க. மேற்கு மண்டலச் செயலாளர் பாலு உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



# பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் ஒப்புதல் டொனால்ட் ட்ரம்ப் முயற்சிக்கு மோடி வரவேற்பு

அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் முன்வந்துள்ள நிலையில், ட்ரம்ப்பின் முயற்சியை இந்திய பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

மத்திய கிழக்கில் நீடித்த மற்றும் நியாயமான அமைதிக்கு வித்திடக்கூடிய இந்த முயற்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 2023 ஆம் அண்டு ஒக்டோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது மேற்கொண்ட தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் தீவிரமடைந்தது.

இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக காசாவில் 65,000 அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், மத்திய கிழக்கு பகுதியில் ஏதேனும் ஒரு வழியில் அமைதி ஏற்பட வேண்டும்.

ஹமாஸ் வசம் உள்ள அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார்.

முக்கியமாக வொஷிங்டன் நேரப்படி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குள் அமைதி ஒப்பந்தத்துக்கு ஹமாஸ் உடன்பட வேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதுவே ஹமாஸ்'க்கு இறுதி வாய்ப்பு என்றும் இதற்கு உடன்படவில்லை என்றால் அவர்களுக்கு எதிராக மிகவும் தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

ட்ரம்ப்பின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்பு அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க தயார் என்றும், உடனடியாக அமைதி பேச்சுவார்த்தையை மத்தியஸ்தர்கள் மூலம் முன்னெடுக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

# உக்ரைனின் ஷோஸ்ட்கா ரயில் நிலையத்தில் ரஷ்யா மேற்கொண்ட தாக்குதலில் 30 பேர் காயம்



உக்ரைனின் சுமி பகுதியில் உள்ள ஷோஸ்ட்கா ரயில் நிலையத்தில் ரஷ்யா மேற்கொண்ட தாக்குதலில் சுமார் 30 பேர் காயமடைந்துள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வஎக்ஸ் தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் காயமடைந்தவர்கள் பற்றிய அனைத்து தகவல்களும் சரிபார்க்கப்பட்டு வருவதாகவும், மக்களுக்கு உதவ அனைத்து அவசர சேவைகளும் ஏற்கனவே சம்பவ இடத்திற்கு வந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்ப அறிக்கைகளின்படி, ரயில் ஊழியர்கள் மற்றும் பயணிகள் தாக்குதல் நடந்த இடத்திலிருந்துள்ளனர் என தெரியவந்துள்ளது.




# சாரதி அனுமதிபத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

சாரதி அனுமதிபத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நீடிக்கப்படவுள்ள கால எல்லை தொடர்பில் ஆராய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் தொழில்நுட்ப அதிகாரிகள் இந்த குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையொன்றை வழங்குமாறு குறித்த குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கூறினார்.

அதனை தொடரந்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

தற்போது இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிபத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 8 வருடங்களாகவும் கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிபத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் 4 வருடங்களாகவும் காணப்படுகின்றது.

# 9 மாதங்களில் நடந்த சோதனையில் 1,248 கிலோ ஹெரோயின் மீட்பு



கடந்த 9 மாதங்களில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 1,248 கிலோ கிராம் ஹெரோயின் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகருமான மினுர செனரத் தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் 1,852 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளும், கஞ்சா 14,221 கிலோ கிராமும், கொக்கெய்ன் 29 கிலோ கிராமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போதைப் பொருள் தொடர்பிலான தகவல்களை வழங்க பொலிஸ் தொடர்பாடல் கட்டமைப்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஹெரோயின், ஐஸ், கொக்கெய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களின் பரவல் குறித்து பொதுமக்களுக்கு நேரடியாக தகவல்களை வழங்குவதற்காக மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க பொதுமக்கள் வழங்கும் ஆதரவுக்கு பாராட்டு தெரிவிக்கும் பொலிஸார் குறித்த தகவல்களின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

# அரச ஊழியர்கள் சம்பள முரண்பாட்டை தீர்க்க இம்முறை வரவு செலவு திட்டத்தில் கவனம்

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்க்க இம்முறை வரவு-செலவு திட்டத்தில் கவனம் செலுத்தப்படுமென பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு கடந்த வரவு-செலவு திட்டத்தின் போது அதிகரிக்கப்பட்ட சம்பளத்தின் மற்றுமொரு பகுதியை இம்முறை வரவு செலவு திட்டத்தில் பெற்றுக்கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டார்.

அரச ஊழியர்கள் மத்தியில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் கூறினார்.






அப்துல் அஸீஸ் அஸ்மா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# அறிவின் தீபமும் நாளைய சமூகத்தின் ஒளியும் ஆசிரியர்கள்!

இலங்கையில் ஆசிரியர் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 5 அன்று கொண்டாடப்படுகிறது.

இந்த நாள் ஆசிரியர்களின் பங்களிப்பையும், அர்ப்பணிப்பையும் நினைவூட்டும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் அறிவுப் பயிற்சி மட்டும் அல்ல, மாணவர்களின் வாழ்வியல் திறன்கள், ஒழுக்கம் மற்றும் சமூக நெறிகளை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

மாணவர்களுக்கு அறிவுரையும், நேர்மையான ஆலோசனையும் வழங்குவது அவர்களின் அன்றாட கடமை.

இந்த நாளில் பள்ளிகள், கல்லூரிகள் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றன.

மாணவர்கள் மலர் கொடுக்கும், கவிதைகள், கீதங்கள், நாடகங்கள் மூலம் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துகின்றனர்.

சில கல்வி நிறுவனங்களில் ஆசிரியர்களின் சாதனைகள், பங்களிப்பு மற்றும் வாழ்க்கை அனுபவங்களைப் பகிரும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

இலங்கையில் ஆசிரியர் தினம், மாணவர்களுக்கும் சமூகத்துக்குமான விழாவாகவும், சமூகத்தில் நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் அறிவுத் திறனை ஊக்குவிக்கும் நாளாகவும் இருக்கிறது.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல், மாணவர்களின் ஒழுக்கமும், சமூக நலனும் பாதிக்கப்படும் என்பதே உண்மை.

இந்த நாள் மாணவர்கள், பெற்றோர்கள், சமூக அமைப்புகள் இணைந்து ஆசிரியர்களுக்கு மதிப்பும், மரியாதையும் தெரிவிக்கும் ஒரு பொது விழாவாக உள்ளது.

நல் சமூகத்தின் அடித்தளம் கல்வி என்பதில் மட்டும் முடங்காது அந்த அடித்தளத்தை உருவாக்கும் முக்கிய சக்தி ஆசிரியர்களில் உள்ளது. ஆசிரியர் என்பது வெறும் பாடங்களை கற்பிப்பவர் அல்ல. அவர் மாணவர்களின் மனதையும் சிந்தனையையும், சமூகப் பொறுப்பையும் வடிவமைக்கிறார். மாணவரின் மனதில் விதிக்கப்பட்ட ஒழுக்கம், நியாயம், பொறுப்பு போன்ற விதைகள் நாளை சமூகத்தின் தரத்தை நிர்ணயிக்கும். பழமொழி சொல்கிறது, “முளைமரத்தில் சாயும் விட்டு, பழம் பெறுவது கஷ்டம்”. அதேபோல், நல்ல மனிதர்கள் உருவாகுவது தகுந்த வழிகாட்டிகளின் அர்ப்பணிப்பினால் மட்டுமே சாத்தியம்.

ஆசிரியர் ஒருவரின் பணி வெறும் கற்பித்தலுடன் வரையறுக்கப்படுவதில்லை. அவர் மாணவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முன்முயற்சியை மேற்கொள்கிறார். அந்த முயற்சி தொழில்நுட்பம் அல்லது புத்தகங்கள் அளிக்க முடியாத, மனித மனதில் நீடிக்கும் கல்வி. இன்றைய மாணவர்கள் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவ்வாறு வன்முறை, புறக்கணிப்பு, தடைகள் போன்றவற்றை எதிர்கொண்டு நல்ல குடிமக்களாக இருப்பது ஆகியவற்றை கற்றுக்கொள்கிறார்கள். ஒரு சிறிய ஊரக பள்ளி எடுத்துக்காட்டாகக் கொண்டால், வளமில்லாத சூழலில் கூட ஆசிரியர் அர்ப்பணிப்பு காரணமாக மாணவர்கள் சமூகத்திற்கு பயனுள்ள தலைவர்களாகவும், சமூக முன்னேற்றத்துக்கு அடித்தளமளிக்கும் நற்பண்புடைய நபர்களாகவும் உருவாகி வருகின்றனர்.

ஆசிரியர் தினம் என்பது வெறும் மலர்கள், வாழ்த்து அட்டைகள் மற்றும் “நன்றி சார்” என்ற சொற்களால் மட்டுமின்றி, ஆசிரியரின் அர்ப்பணிப்பு, தியாகம் மற்றும் சமூகப் பங்களிப்புகளை நினைவூட்டும் நாளாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் நேரத்தை, உடல் வசதியையும், மனதை முழுமையாக செலவிட்டு கற்பிக்கிறார்கள். சிலர் தனிப்பட்ட வாழ்க்கையையும், குடும்பப் பொறுப்பையும் புறக்கணித்து மாணவர்களின் வளர்ச்சிக்காக செயல்படுகிறார்கள். அவர்களது அறிவும், ஒழுக்கமும், கடுமையான உழைப்பும் மாணவர்களின் மனதில் நீடிக்கும்

தொடர்ச்சி▼

# அறிவின் தீபமும் நாளைய சமூகத்தின் ஒளியும் ஆசிரியர்கள்!

தொடர்ச்சி▲

விதைகளை விதிக்கிறது.

பழமொழிகள், கதைகள், வாழ்க்கை எடுத்துக் காட்டுகள் அனைத்தும் இதை உறுதிப்படுத்துகின்றன. "ஒரு நல்ல குருவே நூறு மக்களை மாற்றுகிறார்" என்பது உண்மை. ஒரு ஆசிரியர் மாணவரின் மனதில் விதைக்கும் சிறிய கருத்தும் நாளை சமூக மாற்றத்தை உருவாக்கக்கூடியது. மாணவர் தவறான பாதையில் செல்லும் போது, நேர்மையான வழி காட்டுதலுடன் அவர் திருப்பி வைத்து நடத்துகிறார். சமூகத்தில் வன்முறை, துஷ்பிரவைகள், பகைமை போன்றவற்றுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துவது ஆசிரியரின் பங்கு. இவை அனைத்தும் சமூகத்தில் நல்ல பழக்க வழக்கங்களை நிலைநாட்டுகின்றன.

உலகின் சிறந்த தலைவர்கள், அறிவியலாளர்கள், சமூக சேவையாளர்கள் தங்களின் ஆரம்ப தாக்கத்தை ஆசிரியர்களிடமிருந்தே பெற்றுள்ளனர். அவர்களது அறிவு, ஒழுக்கம், சமூகப் பொறுப்பு ஆகியவற்றை மாணவர்களுக்கு தந்தவர்கள் ஆசிரியர்கள். இதுவே காட்டுகிறது, சமூக மாற்றத்தின் அடித்தளம் ஆசிரியர்களின் கையிலே இருப்பதே.

தாயாரின் அன்பு, தந்தையின் பாதுகாப்பு போன்ற மரியாதைகள் போல, ஆசிரியரின் அர்ப்பணிப்பு குழந்தைகளின் மனதில் ஒளியாகும். ஆசிரியர் விதைக்கும் ஒளி மாணவர்களின் சிந்தனை முறையையும், சமூகப் பொறுப்பையும், மனிதநேயம் மற்றும் நன்மைச் செயல்பாடுகளையும் வடிவமைக்கிறது. பழமொழி சொல்கிறது, "ஒரு அறிவாளியான குருவே, ஒரு நாட்டின் எதிர்காலத்தை வடிகட்டுகிறார்".

ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் காட்டும் அர்ப்பணிப்பு சமூகத்தின் பலவகை அம்சங்களில் வெளிப்படுகிறது. அவர்கள் மாணவர்களின் அறிவைப் பரிமாறுவதோடு, மாணவர்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும், நீதிமுறை, ஒழுக்கம், பொறுப்புணர்வு ஆகியவற்றை உணர வேண்டும் என்பதற்கும் வழிகாட்டுகிறார்கள். அன்றாட வாழ்க்கை எடுத்துக்காட்டுகளில், ஒரு மாணவன் தனது சொந்த வாழ்க்கையில் கடுமையான தேர்வுகளைச் செய்யும் போது, ஆசிரியர் தரும் அறிவுரை அவரது முடிவுகளை நேர்த்தியான முறையில் வழிமொழிகிறது. இதன் விளைவாக, சமூகத்தில் ஒழுக்கம், பொறுப்புணர்வு, பரஸ்பர உதவி ஆகியவற்றில் நிலைத்த வளர்ச்சி ஏற்படுகிறது. மற்றும் மனநிலை மாணவரின் வாழ்க்கையை மாற்றுவதோடு, அந்த மாற்றம் தொடர்ந்த தலைமுறைகளின் மனத்திலும் தொடர்கிறது. பழமொழி சொல்கிறது: "ஒரு விதைக்கப்பட்ட விதை நூறு பழங்களை தரும்". அதேபோல், ஆசிரியர் விதைக்கும் அறிவும் மாணவர்கள், மாணவியர்கள் வாழ்க்கையில் நல்ல பழங்களை உருவாக்குகிறது. இத்தகைய பழங்கள், சமூக நெறிமுறை, ஒழுக்கம், பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படை.

ஆசிரியர்கள் சாதாரண வகுப்பறை பணி மட்டும் செய்வது அல்ல. அவர்கள் அன்றாடம் மாணவர்களின் வாழ்க்கைச் சூழலை கவனித்து, அவர்களை சமூக சவால்களுக்கு முன்னேற்றுகின்றனர்.

ஆசிரியர்கள் தினசரி செய்யும் அர்ப்பணிப்பு, ஒரே நேரத்தில் கல்வி மற்றும் வாழ்க்கை வழிகாட்டுதலின் சங்கமமாகும்.

அவர்கள் மாணவர்களின் தனிப்பட்ட திறன்களை கண்டறிந்து, அவர்களுக்கு ஏற்ற வழிகளை அமைக்கின்றனர்.

ஒரு மாணவனின் கவனத்தை ஈர்க்கும் சின்ன முயற்சி கூட, அவன் வாழ்வின் மனப்பாங்கை மாற்றக் கூடும்.

ஆசிரியர்கள் அவர்களது நேரத்தையும் சொந்த வசதிகளையும் மீறி, கூடுதல் பயிற்சிகள், ஆலோசனைகள், ஆதரவு அளிக்கின்றனர்.

அறிவுத்திறனை வளர்ப்பது மட்டுமல்ல, நேர்மை, பொறுப்புணர்வு, மனிதநேயம் போன்ற பண்புகளை வலுப்படுத்துவது அவர்களின் முதன்மை நோக்கம்.

சில ஆசிரியர்கள் பாடத்திட்டத்துக்கு வெளியே கூட மாணவர்களின் மனஅழுத்தங்களை கவனித்து, உற்சாகம் கொடுக்கின்றனர். அவர்கள் காட்டும் அன்பு மற்றும் அர்ப்பணிப்பு, மாணவர்களின் சமூக பங்களிப்பை ஊக்குவிக்கிறது.

ஒரு சமூகத்தில் ஒழுக்கம் மற்றும் நல்ல பழக்க வழக்கங்கள் நிலைநாட்டப்படுவதில் ஆசிரியர்கள் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள். அவர்களின் கடின உழைப்பு, குறைந்த வளங்களிலும் தொடர்ச்சியாக வெளிப்படும், எதிர்கால தலைமுறையின் நலனை உறுதிப்படுத்துகிறது.

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல், மாணவர்களின் வாழ்வில் நிலையான நேர்மை மற்றும் பொறுப்புணர்வு வளராது சமூகத்தின் தரமும் பாதிக்கப்படும்.

இந்த அர்ப்பணிப்பு, மாணவர்கள் ஒழுக்கமான, அறிவார்ந்த, சமூக சேவையாளர்களாக வளர்கின்றதை உறுதிப்படுத்தும் ஆழமான சக்தியாகும்.

எ நல் சமூகத்தை உருவாக்குவது ஆசிரியர்களின் கையால் மட்டுமே சாத்தியம். அவர்களின் அறிவும், ஒழுக்கமும், அர்ப்பணிப்பும் இல்லாமை, சமூகத்தின் தரத்தையும் நெறிமுறையையும் பாதிக்கும். இன்று நாம் ஆசிரியர்களுக்கு மரியாதை, மதிப்பு, ஆதரவு வழங்க வேண்டும். அவர்கள் விதைக்கும் ஒளி நாளைய தலைமுறையின் வழிகாட்டியாக அமைந்து, சமூகத்தின் நல்ல பழங்களை உருவாக்கும்.

ஆசிரியர் தினம் வெறும் நன்றி சொல்லும் நாள் அல்ல. அது ஆசிரியர்களின் சமூகப் பங்கு, தியாகம் மற்றும் அர்ப்பணிப்புகளை நினைவூட்டும் நாள் என்றும், நாளைய நல் சமூகத்தின் அடித்தளத்தை வலுப்படுத்தும் நாள் என்றும் இருக்க வேண்டும்.






# அறிவைப் போற்றும் நன்னாள் இன்று!



கி.டினுஜிக்கா
மூன்றாம் வருடம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

“எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்” என்ற ஔவையின் வாக்குப்படி ஆசிரியர் என்பவர் இறைவனுக்கு சமமானவராக பார்க்கப்படுகின்றார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறுவார்கள். ஒரு குழந்தைக்கு தனது தாய், தந்தைக்கு அடுத்து ஆசிரியரே நல்லொழுக்கம், பண்பாடு, அறிவு, கல்வி என அனைத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். இத்தகைய ஆசிரியர்களை கௌரவப்படுத்துவதற்காகவும், உலகெங்கிலும் ஆசிரியர்களின் பங்களிப்பையும் சாதனைகளையும் போற்றும் விதமாக ஒக்ரோபர் 05 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. கல்வி மற்றும் சமூக வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் ஆற்றிவரும் மகத்தான சேவையை பாராட்டவும்இஅவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தவும் இந் நாள் அனுசரிக்கப்படுகிறது.

ஆசிரியர் தினத்தின் வரலாறு பற்றி நோக்கும்போது,

ஆண்டுதோறும் ஒக்டோபர் 05 ஆம் திகதி ஆசிரியர் தினம்கொண்டாடப்படுகிறது. ஆசிரியர்களின்நிலை குறித்து 1966 ஆம் ஆண்டு யுனெஸ்கோ மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு பரிந்துரையில் கையெழுத்திட்டதை நினைவுகூறும் வகையில் கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனை அடுத்து ஜக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு 1994 ஆம் ஆண்டு முதல் இந் நாளைக் கொண்டாடி வருகின்றது.

சர்வதேச ஆசிரியர் தினம் “உலகின் கல்வியலாளர்களை பாராட்டுதல்இமதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதையும், ஆசிரியர்களுக்காக சிக்கல் மற்றும் கற்பித்தல் தொடர்பான சிக்கல்களை கருத்தில் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. கற்பித்தலை ஒரு கூட்டுத்தொழிலாக மறு பரிசீலனை செய்தல் என்ற தொனிப்பொருளின் கீழ் 2025ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் ஆசிரியர் தினமானது வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகிறது. இலங்கையில் ஒக்டோபர் 05 ஆம் திகதியும், இந்தியாவில் முன்னாள் குடியரசுத்தலைவர் சர்வபள்ளி இராதாகிருக்ஷ்ணனின் பிறந்தநாளான செப்டம்பர் 05 ஆம் திகதியும் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

## ஆசிரியர் பணியின் சிறப்புக்கள்

ஒரு நாட்டின் எதிர்காலம் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர் பணி மற்ற எல்லா துறைகளுக்கும் அடித்தளமாக விளங்குகிறது. மருத்துவர், பொறியியலாளர், விஞ்ஞானி, அரசியல்வாதி என எல்லாத் துறை சார்ந்தோரும் ஒரு ஆசிரியராலே உருவாகின்றனர். ஆசிரியர்கள் இல்லாமல் எந்தவொரு நிபுணத்துவத்துறையும் உருவாக முடியாது. ஒரு மனிதனின் திறமையை அடையாளம் கண்டு அது நோக்கி அவனை வழிநடத்துபவராக, தன்னம்பிக்கை, தைரியத்தை கொடுப்பவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். ஒரு ஆசிரியரின் கடமை கல்வியை மட்டும் புகட்டுவதல்ல. நல்லொழுக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என அனைத்தையும் ஒரு சேர கற்றுக்கொடுத்து அவனை நல்ல மனிதனாக ஒரு நாட்டின் குடிமகனாக, பண்புள்ளவனாக, அறிஞனாக, மேதையாக சமூகத்தின் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும் உயரிய பொறுப்பு ஆசிரியர்களின் சிறப்புக்களில் ஒன்று.

பழங்கால கல்வி மரபுகளில் குரு என்பவர் இருளை நீக்குபவர் என்று பொருள்படும். ஆசிரியர் புத்தக அறிவைத் தாண்டி மாணவர்களின் சந்தேகம் அறியாமை, பயம் ஆகிய இருளை நீக்கி விமர்சன சிந்தனை பகுத்தறிவு மற்றும் சுய ஆய்வு ஆகிய ஒளியை அவர்களுக்குள் பாய்ச்சுகிறார்.

ஒரு தேசத்தின் மிகப்பெரிய சொத்து அதன் மனிதவளமே. தரமான கல்வியின் மூலமும் திறமையான குடிமக்களை உருவாக்குவதன் மூலமும் ஆசிரியர்கள் ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் வளர்ச்சிக்கு நேரடியாக பங்களிக்கின்றனர்.

ஆசிரியர் மாணவர் உறவுநிலை அன்றும் இன்றும் குருகுலக்கல்வி மற்றும் திண்ணைக் கல்வி முறையில் ஆசிரியர்-மாணவர் உறவு என்பது ஆழமான பக்தி மற்றும் நெருக்கமான தனிப்பட்ட பிணைப்பின் பெயரில் அமைந்திருந்தது. இது வெறும் கற்பித்தல் கற்றல் முறையாக இல்லாமல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக செயல்பட்டது.

குருகுலக்கல்விமுறையில் மாணவர்கள் குருவின் ஆசிரமத்திலேயே தங்கி படித்தனர். மாணவர்கள் ஆசிரியருக்கு பணிவிடை செய்வது, வீட்டுவேலைகளில் உதவுவது, விறகு சேகரிப்பது போன்ற பணிகளை செய்தனர். இந்த கடமைகள் மாணவர்களுக்கு கட்டுப்பாடு, பணிவுஇ பொறுமை மற்றும் வாழ்க்கைத் திறனை கற்றுதந்தன.

அன்றைய ஆசிரியர் மாணவர் உறவு என்பது வெறுமனே அறிவு பரிமாற்றமாக இல்லாமல் தந்தை-மகன் அல்லது வழிகாட்டி-சீடர் போன்ற ஒரு ஆழமான உணர்வு பூர்வமான பிணைப்பை கொண்டிருந்தது.

இன்றைய ஆசிரியர்-மாணவர் நிலை பற்றி பார்க்கும் போது,

இன்றைய ஆசிரியர்- மாணவர் நிலை அவ்வளவு சுமுகமானதாக இல்லை. மாணவர்களே ஆசிரியர்களை எதிரியாக பார்கக் கூடிய சூழல் வளர்ந்து வருகின்றது. இதனால் மாணவர்கள் அவர்கள் சொல்லி கொடுக்கும் பாடத்தை மட்டுமல்ல பள்ளிக்கூடத்தையுமே வெறுக்கக் கூடிய சூழல் காணப்படுகின்றன.

இன்றைக்கு சமூக வலைத்தளத்தில் ஒரு செய்தியை காணக் கூடியதாக இருந்தது. மொனராகலையில் உள்ள பாடசாலை ஒன்றில் 11 ஆம் வகுப்பு மாணவனின் தர்குதலுக்கு உள்ளாகி ஆசிரியர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான பல ஆசிரியர்-மாணவர் முரண்பாடுகளை சமீப காலமாக காணக்கூடியதாக உள்ளது. ஆசிரியர்-மாணவர் உறவு என்பது வலுப்பெற்றதாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் அது வலுவிழந்து காணப்படுவது கவலைக்குரிய விடயமே.

மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைத்து ஒரு தேசத்தின் அறிவு பொக் கிக்ஷத்தை கட்டியெழுப்பும் ஆசிரியர் சேவைக்கு ஏனைய நாடுகளை விடவும் இலங்கையில் மதிப்பும், மரியாதையும் குறைவாகவே உள்ளது. இவ்வாறான நிலையை மாற்றி கடின உழைப்பையும், தன்னலமற்ற சேவையையும் வழங்கும் ஒவ்வொரு ஆசானுக்கும் அவர்களுக்கே உரிய மரியாதையை வழங்க வேண்டும்.

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 25 காங்கேசன்துறை வீதி. 361,363,363/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆலாலசுந்தரம் பெண் உமாதேவி என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி துரையப்பா தணிகாசலமும் பெண் பத்மாவதியும் 18.09.1972ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 616ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் மகள் யோகதேவி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

சின்னத்தம்பி துரையப்பா தணிகாசலமும் பெண் பத்மாவதியும் 18.09.1972ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வ. பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 617ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் மகள் உமாதேவி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

சின்னத்தம்பி துரையப்பா தணிகாசலமும் பெண் பத்மாவதியும் 18.09.1972ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வ. பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 618ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் மகன் இரகுநாதன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

ஆலாலசுந்தரம் பெண் உமாதேவி 28.09.2011ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.இரகுராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3554யு ம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில், குறித்த சோனகன் தறை நிலப்பரப்பு 02 இல் சொரியலாய் நிலப்பரப்பு இலாச்சம் 01 1/4 (ஒன்றே கால்) மேலே 616ம் இலக்க உறுதியில் குறிப்பிட்ட யோகதேவி 1985ம் ஆண்டும், மேலே 618ம் இலக்க உறுதியில் குறிப்பிட்ட இரகுநாதன் 1996ம் ஆண்டும் சந்ததியின்றி இறந்தமையால் குறித்த உறுதிகளின் படி அவர்களுக்குரிய பங்கு உமாதேவிக்கு வந்து முழு ஆதனத்திற்கும் உரித்தாளர் நானே என வெளிப்படுத்தியுள்ளார்.

ஆலாலசுந்தரம் பெண் உமாதேவி 30.06.2023ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.த.விக்னராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2604ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் ஆறுமுகநாதன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை இறை, யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேசசெயலக பிரிவு ஜே/97 ஐயனார் கோவிலடி கிராமசேவகர் பிரிவு 'சோனகன் வளவு' உறுதிப் படி விஸ்தீரணம் நிலப்பரப்பு இலாச்சம் 02 (நிலப்பரப்பு இரண்டு) ஆனால் தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் த.கேதீஸ்வரன் அவர்களால் 23.02.2005ம் திகதி அளந்து விபரித்த 617ம் இலக்க படத்தின்படி துண்டு-1 (லொட்-1) முதல் துண்டு நாலு (லொட் 4) வரை காட்டப்பட்ட பரப்பு நிலம் இலாச்சம் இரண்டு குளி மூன்று தசம் நான்கு ஆறும் (பரப்பு இலாச்சம்.02 குளி 3.46) வான்பயிர் செய்பயிர் களும்.

இதற்கெல்லைகள்:-

கிழக்கு :- காங்கேசனதுறை வீதி

வடக்கு:- கந்தையா துரைசாமிக்கும் தற்போது வேலுப்பிள்ளை மகேந்திரனுக்குமுரிய ஆதனம்.

மேற்கு:- கதிரேசன் கோயிலுக்குரிய ஆதனம்.

தெற்கு:- ஆறுமுகம் சுப்பிரமணியத்திற்கும் தற்போது உதுமான் லெப்பைக்கும் யு.மு முகமதுவுக்கும் உரிய ஆதனம்.

இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை தணிகாசலம் ஆறுமுகநாதன் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது தணிகாசலம் ஆறுமுகநாதன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்,**

**யாழ் மாநகரசபை.**

## மத சபை மாறியமைக்காக மாணவனை தாக்கினாராம் உப அதிபரான மதகுரு!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணத்தில் மத சபை மாறிய மாணவனை உப அதிபரான மதகுரு தாக்கியமையால் மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உள்பட்ட – நகரின் மத்தியில் இயங்குகின்ற – பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மீது உப அதிபரானமதகுருதாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

அந்த மாணவன் மத சபை ஒன்றிற்கு மாறியமை தொடர்பில் கேள்வி எழுப்பியே மாணவனை முழங்காலில் நிறுத்தி வைத்து உப அதிபர் தாக்கினார் எனப் பாதிக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் தெரிவித்துள்ளான்.

இது தொடர்பில் தற்போது பொலிஸாரிடம் முறையிடப் பட்டுள்ளது.

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 12 காரை தீவு வீதி, 332/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மீரான் சாகிப் ஆயிசா மொகிதீன் என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

செல்லையா அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியம்மா 08.12.1975ம் திகதியிட்டு பிரசித்த தொத்தாரிசு எம்.எம் சுல்தான் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6130ம் இலக்க சீதன உறுதி மூலம் சுவாம்பிள்ளை யேசுதாசன் பெண் நீற்றா அல்லது சந்தம்மா என்பவருக்கு தமது சீவிய உரித்திற்கமைவாக வழங்கியுள்ளார்.

சுவாம்பிள்ளை யேசுதாசனும் பெண் நீற்றாவும் 28.07.2010ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜாட்ணம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6523ம் இலக்க சீதன உறுதி மூலம் செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா என்பவருக்கு வழங்கியுள்ளார்

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை. 'கொந்தியார் முனங்கு' உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜே.மனுவல் அவர்களால் 10.05.1947ம் திகதி அளந்து விபரித்த 333ம் இலக்க படத்தின்படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 7. இதில் குறித்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட பாகம் (வடக்கு பக்கமாக அரைவாசி) குளி. (12 1/2) பன்னீரண்டரையும் கல்வீடும் குறித்த படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகத்திலுள்ள கிணற்றிலிதற்குரிய பங்கும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்.

இதற்கெல்லைகள்:-

கிழக்கு :- கிறிஸ்கோ கைம்பெண் அந்தோனிக்கத்தின் ஆதனம்.

வடக்கு :- மார்க்கு மேரியனின் ஆதனம்.

மேற்கு :- நாகமுத்து இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.

தெற்கு:- கையொழுங்கை முகப்பும் குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகமும் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்,**

**யாழ் மாநகரசபை.**

# குறிகாட்டுவான் இறங்குதுறையின் புனரமைப்புக்கு நேற்று அடிக்கல்














யாழ்ப்பாணம், புங்குடுதீவு, குறிகாட்டுவான் இறங்குதுறை மறுசீரமைப்பு கட்டமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சின் 299 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இந்நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.றஜீவன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாணப் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர்கள், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்

மிக நீண்ட காலமாக துறைமுகம் புனரமைக்கப்படாததால் தீவக மக்கள் பல்வேறு அசௌகரிகங்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது துறைமுகம் புனரமைப்பதற்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட்டுள்ளதால் கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற தீவகப் பகுதிகளுக்குச் செல்லும் கடல் பயணிகள் மற்றும் உல்லாச பயணிகளுக்கு இலகுவாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு நேற்றைய நிகழ்வில் நெடுந்தீவு பகுதிக்கான நீண்ட காலப் பிரச்சினையாக காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான ஒப்பந்தமும் நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துடன் பொற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அமைச்சர்கள் முன்னிலையில் செய்து கொள்ளப்பட்டது.

நீண்ட காலமாக தீவக மீனவர்களின் கடல் உணவுகளை சந்தைப்படுத்துவதற்காக புங்குடுதீவு குறிகட்டுவான் கரைக்கு கொண்டு வந்து அதனை வாகனங்களில் ஏற்றுவதற்கு மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கினர். இவ்விடயத்தை மீனவர்கள் தெரியப்படுத்தியதற்கு இணங்க மீனவர்களுடைய இழுவைப்படகுகளை கரைக்குச் சேர்த்து, கடலுணவுகளை கரைக்குக் கொண்டு வந்து ஏற்றுவதற்கு உரிய இடங்களை தெரிவு செய்து, அதனை எதிர்காலத்தில் அமைப்பதற்கான கள ஆய்விலும் அமைச்சர்கள் நேற்று ஈடுபட்டனர்.

# மன்னார் விவகாரத்தில் ஒரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் முடிவு எடுப்பது ஏற்புடையதல்ல

## மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மக்களுடைய வாழ்வியல் உரிமைகளை புரிந்து கொள்ளாமல் காவல் துறையும், அதிகாரிகளும் நடந்து கொள்வது என்பது அடிப்படை உரிமையை மீறுவதுடன் அது ஜனநாயக ஆட்சிக்கு உரித்துடைய போக்கல்ல என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கு நேற்று சனிக்கிழமை அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

கடந்த பல வருடங்களாக காற்றாலை, கனிம மண் அகழ்வுக்கு எதிராக ஜனநாயகப் போராட்டம் நடத்தி வருகிறோம். அதன் தொடர்ச்சியாகக் கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் அமைச்சர்களுடனான கலந்துரையாடலும் பின்னர் தங்களுடனான உரையாடலும் நடைபெற்றன.

அதன் விளைவாக ஒரு மாத காலம் பணிகள் இடை நிறுத்தப்பட்டன.



பின்னர் துறை சார்ந்த அதிகாரிகள் குழு பொது அமைப்புகளுடனும், வலு சக்தி அமைச்சர் தலைமையிலான குழுவினர் பாதிக்கப்பட்ட பொது மக்களுடனும் கலந்துரையாடல் நடத்தியிருந்தனர். இக்கூட்டங்களில் மக்கள் தமது எதிர்ப்புணர்வை கூட்டாக வெளிப்படுத்தியிருந்தனர். அந்த மக்களின் உணர்வுகளையும் பாதிப்பின் வலிகளையும் அனுபவரீதியாக எடுத்துரைத்தும் பயனளிக்கவில்லை.

மக்களினுடைய எதிர்பார்ப்புக்கு மாறாக தாங்களே தீர்மானத்தை எடுத்திருப்பது ஜனநாயக முறைமைக்கு உகந்ததல்ல.

வாதங்கள் என்பது இருதரப்பு பகிர்வு ஊடாக முரண்பாடுகளை களைந்து குறைந்தபட்ச விட்டுக் கொடுப்புடனாவது தீர்மானத்துக்கு வருவதுதான் - இருதரப்பினரும் ஒருசேர நிலைப்பாட்டுக்கு வருவது என்பதே - சனநாயகப் பண்பியல்பாகும்.

இது நீதிமன்ற தீர்ப்பு போல் உள்ளது. அரச இயந்திரம் என்பது ஆட்சி மாற்றத்திற்கு பின்னும் காட்சி மாறவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

எமது மக்களுடைய வாழ்வியல் உரிமைகளை புரிந்து கொள்ளாமல் காவல்துறையும், அதிகாரிகளும் நடந்து கொள்வது என்பது அடிப்படை உரிமையை மீறுவதுடன் ஜனநாயக ஆட்சிக்கு உரித்துடையதல்ல. எனவே இறுதி முடிவு எடுப்பதற்கு முதல் எம்முடன் கலந்துரையாடி இருக்க வேண்டியது மக்களாட்சித் தத்துவத்தின் இலக்கணமாய் இருக்க வேண்டும் என்பதே மரபாகும்.

ஆகவே கனிம மண் அகழ்வு திட்டத்தை நிறுத்துவது தொடர்பாக எந்த விதமான அறிவித்தலும் இதுவரை வெளியிடப்படவில்லை.

கனிம மண் அகழ்வில் ஈடுபடவுள்ள இரண்டு நிறுவனங்களும் வழமையான பணிகளை முன்னெடுத்து வருகின்றன. மன்னார் மக்களின் கோபமும், வலியும் நியாயமானது என்பதை புரிந்து கொள்ள தவறுகிறீர்கள் என்பது கவலையளிக்கின்றது.

இச்செயல் ஜனநாயக ஆட்சி அதிகாரத்தின் சட்டவாக்கக் கோட்பாடு, மக்களாட்சி தத்துவத்தை மீறும் செயலாகும். இது கடந்த கால ஆட்சியாளர்களுக்கும் தங்களுக்கும் வேறுபாடற்ற நிலை காணப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் உணர்கிறார்கள்.

அந்த உணர்வு தங்கள் மீதான இடதுசாரித்துவ பார்வையை கேள்விக் குட்படுத்துவதாகவே எமக்கு புலப்படுகிறது.

பரிகாரத்துக்கு முதல் சமூக சமநீதி அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம். மனிதனின் நிம்மதியான வாழ்க்கை சீர் கெடும்போது இருப்பியல் முறைமை சிதைவடைந்துவிடும் என்பதை புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள் என்பது வேதனைக்குரியது.

ஆகவே ஒரு தரப்பாக வாதங்களின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பது ஏற்புடையதல்ல. அதை மீள் பரிசீலனை செய்து மீண்டும் எம்முடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வர வேண்டுமென தங்களிடம் அவசரமாகவும் அவசியமாகவும் கேட்டுக் கொள்கிறோம். - என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொது அமைப்புக்களின் ஒன்றியம்**
**மன்னார் மாவட்டம்**
**Federation Of Community Based Organizations**
**Mannar District**
Main Street, Manar
T.P: 077 8355 464
பிரதான வீதி, மன்னார்

அதிமேதகு சனாதிபதி அனுரகுமார திசாநாயக்க
இலங்கை சனநாயக சோசலிச குடியரசு,
இலங்கை

04.10.2025

<u>சனநாயகமற்ற தீர்மானம்</u>

கடந்த பல வருடங்களாக காற்றாலை கனிம மண் அகழ்வுக்கு எதிராக சனநாயகப் போராட்டம் நடாத்தி வருகின்றோம். அதன் தொடர்ச்சியாக கடந்த மாதம் பாராளுமன்றத்தில் அமைச்சர்களுடனான கலந்துரையாடலும் பின்னர் தங்களுடனான உரையாடலும் நடைபெற்றன. அதன் விளைவாக ஒரு மாத காலம் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

பின்னர் துறை சார்ந்த அதிகாரிகள் குழு பொது அமைப்புகளுடனும், வலுச்சக்தி அமைச்சர் தலைமையிலான குழுவினர் பாதிக்கப்பட்ட பொதுமக்களுடனும் கலந்துரையாடல் நடாத்தியிருந்தனர். இக்கூட்டங்களில் மக்கள் தமது எதிர்ப்புணர்வை கூட்டாக வெளிப்படுத்தியிருந்தனர். அந்த மக்களின் உணர்வுகளையும் பாதிப்பின் வலிகளையும் அனுபவரீதியாக எடுத்துரைத்தும் பயனளிக்கவில்லை.

மக்களினுடைய எதிர்பார்ப்புக்கு மாறாக தாங்களே தீர்மானத்தை எடுத்திருப்பது சனநாயக முறைமைக்கு உகந்ததல்ல.

வாதங்கள் என்பது இருத்தரப்பு பகிர்வு ஊடாக முரண்பாடுகளைக் களைந்து குறைந்தபட்ச விட்டுக்கொடுப்புடனாவது தீர்மானத்துக்கு வருவது தான் இருதரப்பினரும் ஒருசேர நிலைப்பாட்டுக்கு வருவது என்பதே சனநாயகப் பண்பியல்பாகும். இது நீதிமன்ற தீர்ப்பு போல் உள்ளது. அரச இயந்திரம் என்பது ஆட்சி மாற்றத்திற்கு பின்னும் காட்சி மாறவில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

எமது மக்களினுடைய வாழ்வியல் உரிமைகளை புரிந்து கொள்ளாமல் காவல்துறையும், அதிகாரிகளும் நடந்து கொள்வது என்பது அடிப்படை உரிமையை மீறுவதுடன் சனநாயக ஆட்சிக்கு உரித்துடையதல்ல. எனவே இறுதி முடிவு எடுப்பதற்கு முதல் எம்முடன் கலந்துரையாடியிருக்க வேண்டியது மக்களாட்சித் தத்துவத்தின் இலக்கணமாயிருக்க வேண்டும் என்பதே மரபாகும்.

ஆகவே கனிம மண் அகழ்வுத் திட்டத்தை நிறுத்துவது தொடர்பாக எந்த விதமான அறிவித்தலும் இதுவரை வெளியிடப்படவில்லை. கனிம மண் அகழ்வில் ஈடுபடவுள்ள இரண்டு நிறுவனங்களும் வழமையான பணிகளை முன்னெடுத்து வருகின்றன. மன்னார் மக்களின் கோபமும், வலியும் நியாயமானது என்பதை புரிந்து கொள்ள தவறுகிறீர்கள் என்பது கவலையளிக்கின்றது.

இச்செயல் சனநாயக ஆட்சி அதிகாரத்தின் சட்டவாக்க கோட்பாடு, மக்களாட்சி தத்துவத்தை மீறும் செயலாகும். இது கடந்த கால ஆட்சியாளர்களுக்கும் தங்களுக்கும் வேறுபாடற்ற நிலை காணப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் உணர்கிறார்கள். அந்த உணர்வு தங்கள் மீதான இடதுசாரித்துவ பார்வையை கேள்விக்குட்படுத்துவதாகவே எமக்கு புலப்படுகிறது பரிகாரத்துக்கு முதல் சமூக சம நீதி அவசியம் என்பதனை வலியுறுத்த விரும்புகிறோம். மனிதனின் நிம்மதியான வாழ்க்கை சீர்கெடும்போது இருப்பியல் முறைமை சிதைவடைந்துவிடும் என்பதை புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள் என்பது வேதனைக்குரியது.

ஆகவே ஒரு தரப்பாக வாதங்களின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பது ஏற்புடையதல்ல. இதனை மீள்பரிசீலனை செய்து மீண்டும் எம்முடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வரவேண்டுமென தங்களிடம் அவசரமாகவும் அவசியமாகவும் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

வி.எஸ்.சிவகரன்
தலைவர்
பொது அமைப்புகளின் ஒன்றியம்
மன்னார்

பிரதி: அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்



# உள நல நாளினை முன்னிட்டு வவுனியாவில் குடும்ப உறவுகளுக்கான விளையாட்டு நிகழ்வு

**(கி.வசந்தன்)**

உள நல நாளினை முன்னிட்டு குடும்ப உறவுகளிற்கான விளையாட்டு நிகழ்வு நேற்று வவுனியா, சமளங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றிருந்தது.

இதன் போது பிரதம விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து பாண்ட் வாத்தியம் முழுங்க அழைத்து வரப்பட்டனர்.

அத்துடன் அம்மாக்கள் அணி மற்றும் மகள்கள் அணிகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியும், அப்பாக்கள் அணி மற்றும் மகன்கள் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியும் இடம்பெற்றன.

சமளங்குளம் பாடசாலை அதிபர் கே. கணேஷ் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்விலே பிரதம விருந்தினராக தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் ரி.முகுந்தன் மற்றும் கல்வித்திணைக்கள உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.















# 77 வைத்தியர்களுக்கும், 90 தாதியர்களுக்கும் வெற்றிடங்கள் வடக்கு வைத்தியசாலைகளில்!

## மொத்தம் 1,637 பதவிநிலைகள் நிரப்பப்பட வேண்டும்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் இன்றும் 77 வைத்தியர்கள் மற்றும் 90 தாதியர்கள் உள்பட 1637 வெற்றிடம் காணப்படுகின்றமை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கின் 5 மாவட்டத்திலும் உள்ள வைத்தியசாலைகள், சுகாதாரத் திணைக்களங்களில் அனுமதிக்கப்பட்ட ஆளணி மற்றும் தற்போதுள்ள ஆளணி தொடர்பில் கேட்கப்பட்ட விடயத்திற்கு அளிக்கப்பட்ட பதிலின் மூலமே இந்த தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் 857 வைத்தியர்கள் தேவையான இடத்தில் தற்போது 780 வைத்தியர்கள் பணியில் உள்ளனர். இதேபோன்று ஆயிரத்து 128 தாதியர்கள் தேவையானபோதும் ஆயிரத்து 38 பேர் பணியில் உள்ளனர். இதற்கமைய வைத்தியர்கள் தாதியர்கள் அதிகளவு பற்றாக்குறை காணப்படவில்லை.

5 மாவட்டத்திலும் 888 'அற்றன்டன்' பணியில் இருக்க வேண்டியபோதும் தற்போது 627 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். இதில. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 388 பேர் தேவையான போதும் 268 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். இதேபோன்று 62 சமையலாளர்களிற்காக 12 பேரும், 40 ஓவசியர்களிற்காக இருவரும், 245 சாரதிகளிற்காக 219 பேரும் பணியாற்றும் அதேநேரம் 34 தொலைபேசி இயக்குநர்களிற்காக 19 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

இதேபோன்று எஸ்.கே.எஸ் எனப்படும் உதவியாளர்கள் பணியில் ஆயிரத்து 889 பேர் தேவையானபோதும் தற்போது ஆயிரத்து 50 பேர் மட்டுமே பணியில் உள்ளமையோடு 125 காவலாளிகள் இருக்கவேண்டியபோதும் 25 பேர் மட்டுமே பணியில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் காற்றாலை விவகாரம் நீண்டு செல்கிறது மக்களின் அரசாங்கம் என்றால் விட்டுக்கொடுங்கள்

## மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலர் ஆலம் கோரிக்கை




**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை விடயம் நீண்டு கொண்டு செல்கிற நிலையில் மன்னார் மாவட்டம் போராட்டத்தினால் முடக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இப் போராட்டத்தினால் அரசும் பாரிய இடர்களைச் சந்திக்கின்ற நிலையில் மன்னார் மக்கள் தமது போராட்டம் நியாயமானது, அதற்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையில் போராடி வருகின்றனர்.

எனவே மக்களின் அரசாங்கம் என்ற வகையில் அரசு விட்டுக் கொடுப்பிற்கு வரவேண்டும் என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் என். எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள சங்க அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கின்றமை முதன்மை பெறுகிறது.

இந்த விடயம் மன்னார் மாவட்டத்தில் மட்டும் இன்றி உள்நாட்டிலும், சர்வதேச ரீதியாகவும் ஒரு பேசு பொருளாக காணப்படுகின்றது.

இந்தக் காற்றாலைத் திட்டம் மன்னார் தீவுப் பகுதியில் உள்ள மக்களுக்கு எந்த அளவிற்கு பாதிப்பு என்பதை இந்த இரண்டு மாத காலங்களாக ஜனநாயக ரீதியில் குரல் கொடுத்து வருகின்ற மக்களினால் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

காற்றாலைத் திட்டத்திற்கு எதிராக மன்னார் மாவட்டம் மற்றும் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னாலும் மக்களினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

போராட்டங்களின் ஊடாக மன்னார் தீவுப் பகுதிக்குள் மக்களை பாதிக்கும் காற்றாலை மின் உற்பத்தி திட்டம் வேண்டாம் என்ற கோரிக்கையை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே மன்னார் தீவில் அமைக்கப்பட்டுள்ள 30 காற்றாலைகள், அதற்கு அப்பால் ஜனாதிபதி அவர்கள் அண்மையில் அனுமதித்த 14 காற்றாலைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ள நிலையில், இந்த நடவடிக்கைகளினால் மன்னார் மாவட்டம் பாரிய சர்ச்சைக்குள் சிக்கியுள்ளது.

இந்த அரசாங்கம், மக்களுக்கானது, மக்களின் கோரிக்கைகளுக்கு எதிராக நாங்கள் எதையும் செய்ய மாட்டோம் என்று கூறி மக்களிடம் வாக்குகளை பெற்று வெற்றி பெற்று இன்று ஆட்சி அமைத்துள்ளது.

தற்போது மக்களின் கருத்து ஒரு விதத்திலும், ஜனாதிபதியினுடைய கருத்தும், அரசினுடைய கருத்தும் இன்னொரு விதத்திலும் அமைந்துள்ளமையௌ நாங்கள் தற்போது பார்த்து வருகிறோம்.

எனவே எது எவ்வாறு இருந்தாலும் காற்றாலை விடயம் நீண்டு கொண்டு செல்கிறது. மன்னார் மாவட்டம் போராட்டத்தினால் முடக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இப்போராட்டத்தில் அரசு பாரிய இடர்களைச் சந்திக்கின்றது. மன்னார் மக்கள் தமது போராட்டம் நியாயமானது, அதற்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையில் போராடி வருகின்றனர்.

எனவே மக்களின் அரசாங்கம் என்ற வகையில் அரசு விட்டுக் கொடுப்பிற்கு வரவேண்டும். – என அவர் தெரிவித்தார்.



# ஆசிரியப் பணி: ஏணியும் தோணியுமா? அன்றில் ஏணியும் பாம்பும் விளையாட்டா?

**(ந.லோகதயாளன்)**

ஆசிரியர் தொழில் ஏணியும்,தோணியும் போன்றது என்ற நிலை மாறி ஏணியும் பாம்புமாக மாறி விடுமோ என அச்சம்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

கீழ் இருப்பவத்களை மேலும், இக்கரையில் இருப்பவரை அக்கரைக்கும் கொண்டு செல்லும் பணியில் ஆசிரியர்கள் ஈடுபடுகின்றமையால் ஏணியும், தோணியும் போன்றவர்கள் என வர்ணிக்கப்பட்டார்கள். அவ்வாறே மதிக்கப்பட்டார்கள். இன்று இந்த நிலை அருகி விடுமோ என அச்சம்கொள்ளும் மன நிலை ஏற்பட்டுவிட்டது.

வீட்டில் மனைவி பிள்ளைகளின் அழுத்தம், குடும்ப நெருக்கடி போன்றவற்றால் ஆசிரியர்கள் பலர் அதனை மாணவர்களின் மீது காண்பிக்கின்றனர் என்ற நிலையையும் மறுக்காது விட்டாலும், அனைவரையும் அந்த பட்டியலில் இணைக்க முடியுமா, அவ்வாறு இணைத்தால் ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுவார்களா அல்லது பாசாங்கில் ஈடுபடுவார்களா எனக் கேட்டால் அதற்கு பதிலளிப்பது கடினம்.

மாணவர்களை ஆசிரயர்கள் அடிப்பது தவறு, துன்புறுத்தல் தவறு என்பது தற்போது சட்டப்படியானது. ஆனால் இதனை பெற்றோருக்கும் அப்பால் ஆசிரியர்களே அதிகம் உணர வேண்டும். ஏனெனில் ஆசிரியர்களில் அதிகமானோர் பெற்றோரே. பெற்றோர் எல்லோரும் ஆசிரியராக முடியாது. ஆனால் ஆசிரியர் எல்லோரும் தற்போது அல்லது எதிர்கால பெற்றோராக முடியும்.

மாணவனின் நன்மை கருதி அல்லது உண்மையில் மாணவன் செய்த தவறு ஒன்றிற்காக – மாணவன் உடல், உள ரீதியாக பாதிக்கப்படுவது அன்றிய – மாணவனின் எதிர்கால நன்மை கருதிய – சிறு தண்டணை ஏற்கப்படுமா, இல்லையா என்பதும் கூடக் கேள்விக் குறியாகத்தான் உள்ளது. இதனைப் பயன்படுத்தவும் ஆசிரியர்கள் அஞ்சுகின்ற மனோ நிலை ஏற்படுத்தப்பட்டு விட்டது. இதற்கு அப்பால் இந்தச் சட்டத்தை பயன்படுத்தி, வேண்டாத ஆசிரியர் தண்டிக்கப்பட்டு, சிறை இருந்த சமயம் உண்மை கண்டறியப்பட்டு பெண் அதிபர் எச்சரிக்கப்பட்ட வரலாறும் யாழ்ப்பாணத்தில் உண்டு.

பாடசாலையில் வெற்றியையும் தோல்வியையும் ஏற்றுக்கொள்ளும் மனோ நிலையை மாணவர்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் எனக் கூறினாலும் ஒரு பாடசாலை வெற்றியீட்டியதாக அறிவித்தால் மாணவர்கள் ஏற்றுக் கொண்டனரோ இல்லையோ ஆசிரியர்களும் பெற்றோரும் ஏற்றுக் கொள்வது கிடையாது. வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்ட பாடசாலையில் பல கல்வி அதிகாரிகளின் பிள்ளைகள் கற்பதனால் பக்கச்சார்பான முடிவு வழங்கப்பட்டதாக மாகாணத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று அங்கே விள–க்கமளித்தாலும் ஏற்காது நீதிமன்றம் வரையில் செல்லும் நிலை உருவாகிவிட்டது.

இதிலும் நகைச்சுவை என்னவெனில் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்ட பாடசாலையில் பல கல்வி அதிகாரிகளின் பிள்ளைகள் கற்பதனால் பக்கச் சார்பான முடிவு வழங்கப்பட்டதாக குறிப்பிடும் பாடசாலையின் சார்பில் மாணவர்களின் பெற்றோர் என வழக்குத் தாக்கல் செய்பவர் ஒரு நீதிபதியின் மனைவி, விளையாட்டில் பங்கு கொண்டதும் நீதிபதியின் பிள்ளை, அதே மாவட்டத்தின் நீதிபதி தீர்ப்பளிக்கும் நிலை. இதுவும் இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு சரி அல்லது சட்டம் அனைவருக்கும் சமன் என ஏற்றுக் கொள்வோம். வேறு வழியில்லை.

இந்த நீண்ட பட்டியலில் இறுதியாக இரையானது திருவையாறு ம.வியில் கற்பித்த யாழ்ப்பாணம் ஆசிரியரின் உயிர்.

மாணவனின் கற்றல் செயல்பாட்டில் ஏற்பட்ட மந்த நிலையைப் போக்க ஆசிரியர் கையில் தடியை எடுக்கும் தவறான முடிவை மேற்கொண்டுள்ளார். அந்த தவறான முடிவினால் மாணவன் ஒரு நாள் வைத்தியசாலையில் தங்கி கல்வி கற்கும் நிலைக்கு சென்றுள்ளது. பெற்றோருக்கு பிள்ளைப் பாசம்

தொடர்ச்சி ▼



# ஆசிரியப் பணி: ஏணியும் தோணியுமா?
# அன்றில் ஏணியும் பாம்பும் விளையாட்டா?

தொடர்ச்சி ▲

மேலோங்கியுள்ளது. இதனால் வலயம், மாவட்டம், மாகாணம், மனித உரிமை ஆணைக் குழு மட்டுமன்றி பொலிஸ் நிலையத்திற்கு செல்லவும் தவறவில்லை. சட்டத்தை நாடும் சட்டப்படியான உரிமை அனைவருக்கும் உண்டு.

இதிலே கோபம் மேலோங்கியுள்ளதா என்ற கேள்வி உள்ளது.மாணவனிற்கு உடல் ரீதியில் ஏற்பட்ட பாதிப்பின் தன்மை கருத்தில்கொள்ளப் பட வேண்டிய விடயம்தான். இங்கே இந்த மாணவனின் பெற்றோருக்கு இதனை விளக்கமளிக்க வேண்டிய தேவையே எழாது. ஏனெனில் அந்த பெற்றோர் இன்னுமோர் பாடசாலையின் ஆசிரியர். அவர்களோ மகனை தண்டித்த ஆசிரியரை சிறையில் அடைத்து தண்டிக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்துள்ளனர். இதனால் இந்த மன ஏக்கத்தில் யாழில் இருந்து கிளிநொச்சிக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் அன்று போகும் வழியிலேயே சாவகச்சேரியில் விபத்திற்கு உள்ளானார். அந்த விபத்தின் காரணமாக தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் வைத்திய சாலையில் தங்கி காலில் ஏற்பட்ட முறிவிற்கு சிகிச்சை பெற்று வெளியேறிய பின்பும் ஒரு மாத காலம் ஓய்விற்கு தள்ளப்பட்டபோதும் ஆசிரியப் பெற்றோர் கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் தனியார் காரில் சென்று பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியது மட்டுமன்றி ஆசிரியப் பெற்றோரிடம் மட்டுமன்றி மாணவனிடமும் ஆசிரியர் மன்னிப்பு கோரப்பட்டது. இருந்தபோதும் மன்னிப்பு போதவில்லை.

இதனால் மனமுடைந்து காணப்பட்ட ஆசிரியர் இரு தினங்கள் பாடசாலை சென்றாலும் அதே நினைப்பில் எதிர்கால சட்ட நடவடிக்கை தொடர்பாகவே கருதினார். இதன் விளைவு இறுதியில் தனக்குத் தானே தீ மூட்டி மாணவப் பெற்றோரிடம் மன்னிப்பாக மாறிவிட்டார். இனியும் அந்த ஆசிரியப் பெற்றோர் மன்னிப்பார்களோ தெரியவில்லை. ஆனால் இவ்வாறான நிலை ஏற்படும்போது ஆசிரியர்கள் பிள்ளை படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு முன்பு தனது பிள்ளைகளிற்கு சரியான பெற்றோராக விளங்க வேண்டுமே என்ற மனோ நிலை உருவாக வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு பாடசாலை முன்பாக தினமும் கூடி கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதனை அவதானித்த ஆசிரியர்களில் ஒருவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய மறுநாள் ஆசிரியர் பாடசாலை வரும்போது “பொலிஸிற்கா தகவல் கூறுகின்றாய்?“ என்கின்றான் அந்த கஞ்சா விற்பவன். இதனால் அச்சம்கொண்ட ஆசிரியர்கள் எதற்கு வம்பு எனக் கருதி தினமும் பாடசாலைக்குள் வரும் மாணவர்களை சிறைக்கூடத்திற்கு வரும் பார்வையாளர்கள் போன்று மாணவர்கள் தோளில் சுமந்து வரும் புத்தகப் பையை பரிசோதிக்கின்றனர்.

ஒரு பாடசாலை மாணவிகள் பாடசாலை நேரத்தில் மதில் ஏறிக் குதித்து வெளியே சென்று, பாடசாலை விடும் நேரத்திற்கு முன்பு மீண்டும் அதே வழியாக உள் நுழைவதனை அவதானிக்கும் ஆசிரியர்கள் அதனை பெற்றோரிடம் கூறுவதனைத் தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத அவலம். அதேநேரம் தற்போதைய சட்டம் ஆசிரியர்கள் மட்டுமல்ல, பெற்றோரும் சிறுவர்களை தண்டிக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றின் காரணமாக ஆசிரியர் தொழில் ஏணியும், தோணியும் போன்றது என்ற நிலைமை மாறி ஏணியும் பாம்புமாக மாறி ஏற்றுமா அல்லது இறக்கி விடுமோ என அச்சம்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

# ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்' அறிமுக விழா இன்று குமுழமுனைச் சந்தி முள்ளியவளையில்

கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாணசபையின் மேனாள் அமைச்சருமான பொ.ஐங்கர நேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு "வேர்முகங்கள்" என்ற பெயரில் எங்கட புத்தகங்கள் பதிப்பகத்தின் ஊடாக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலுக்கான அறிமுக விழா இன்று 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குத் தண்ணீரூற்று (குமுழமுனைச் சந்தி) முள்ளியவளை யில் அமைந்துள்ள பரி-மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.




முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. குணபாலன் தலைமையில் நடைபெற உள்ள இவ்வறிமுக விழா வில் கருத்துரைகளை ஊடகவியலாளர் தி. திவாகர் மற்றும் சமூக ஆய்வாரள் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரன் அறிமுக உரையை நிகழ்த்த, நூலின் சிறப்புப் பிரதிகளை மூத்த பாடலாசிரியர் பெ. செல்லக்குட்டி வழங்கி வைப்பார்.

பல்துறைக் கலைஞர் செ. மயில்வாசன் தொகுத்து வழங்கவுள்ள இந்நிகழ்ச்சி யில், வரவேற்புரையை கவிஞர் யோ. புரட்சி ஆற்ற, நிகழ்ச்சியின் இறுதியில் ஏற் புரையை நூலாசிரியர் பொ. ஐங்கர நேசன் நிகழ்த்தவுள்ளார்.



# இன்றைய ராசி பலன்கள் - 03.09.2025




எதிர்ப்புகளை முறியடித்து தொழிலை நிலைப்படுத்த முனைப்போடு செயல்படுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில நேரங்களில் பாதகமான நிலையை ஏற்படுத்தலாம். பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். செவ்வாய் 7 ஆம் இடத்தில் இருக்கிறார்.

உங்கள் எண்ணப்படி திருமண விடயம் சுலபமாக நடக்காது. சுக்கிரன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். கலைத் துறையினர் சில சிரமங்களை சந்திக்க வேண்டிவரும்.

கட்டுமான தொழில் கை கொடுத்து தூக்கிவிடும். இரும்பு சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் அமோகமாக நடக்கும். ராகு ராசியிலேயே அமர்ந்திருக்கிறார். மனைவி மக்களின் போக்கு மனதை காயப்படுத்தும். பொறுமையாக நடந்து கொள்ளுங்கள்.




பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை அடைந்து பூரிப்புக் கொள்வீர்கள். நீண்ட காலமாக இழுவையில் இருந்த வழக்கை முடித்து வைப்பீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில முன்னேற்றமான பலன்களை கொண்டு வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வியாபாரத்தில் பல வெற்றிகளை அடைவீர்கள்.

பிள்ளைகள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவார்கள். கல்வி செலவு அதிகரித்து கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உதவிகரமாக இருப்பார்கள். மனம் விட்டு பேசி குடும்ப பிரச்சினையைத் தீர்ப்பீர்கள். காதல் கைகூடி வந்து நீண்ட காலக் கனவு நிறைவேறும்.

கடல் கடந்து பயணம் செல்லக் கூடிய வாய்ப்பை நண்பர் ஏற்படுத்தித் தருவார். எதிர்பாராத தன வரவு உண்டாகும்.




உடைந்து போன உறவுகளை ஒட்ட வைப்பதற்காக பாடுபடுவீர்கள். மனைவியின் தேவையறிந்து நடந்து கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆடம்பரமாக செலவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். தொழிலுக்கு இருந்த இடையூறுகளை தகர்த்து எறிவீர்கள். வேலை இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வீட்டில் மங்கல காரியங்கள் சிறப்பாக நடக்கும்.கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் கவனமாக இருங்கள். படித்துப் பார்த்து பத்திரங்களில் கையெழுத்து போடுங்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பொருளாதாரம் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டிவரும்.




துணிச்சலுடன் தொழிலை மேம்படுத்துவீர்கள். வளர் நிலவின் வசந்த ஒளி உங்கள் வாழ்க்கை பாதையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். இழுபறியாக இருந்த இடப்பிரச்சனையை புத்திசாலித்தனமாக தீர்ப்பீர்கள். தாய் மாமன் வகையில் சில சங்கடங்கள் வரலாம். உறவினர்களுடன் ஒருமைப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நினைத்த காரியத்தை நண்பர்களில் உதவியோடு சிறப்பாக முடிப்பீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் மிகுந்த லாபத்தை கொடுக்கும்.

ஏதாவது ஒரு பிரச்சனை குடும்பத்தில் உருவாகி மன நிம்மதியை கெடுக்கும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்க விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள். நீண்டகால மனக் கவலை உங்களை விட்டு நீங்கும்.




செலவுகளை கட்டுப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் உங்களுக்கு தோல்விதான் கிடைக்கும். புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு நண்பர்களின் உதவி தாராளமாக கிடைக்கும். போட்டி போட்டு தொழிலில் வெற்றி கண்டு எதிரிகளை பொறாமைப்பட வைப்பீர்கள். போட்டி பந்தயங்களில் மிகப்பெரிய லாபத்தை அடைவீர்கள். சொந்த பந்தங்களால் மனச்சங்கடம் அடைவீர்கள். கலைத் துறையினருக்கு பொற்காலம். சனி 7 ஆம் வீட்டில் இருக்கிறார். துணி வியாபாரிகள் துணிவோடு தொழிலில் இறங்கி அதிக மேன்மை அடைவார்கள். உங்களின் வளர்ச்சியை கண்டு எதிரிகள் வாயடைத்து நிற்பார்கள். தேவையில்லாத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்திற்கு இடையூறாக இருந்த வில்லங்கங்கள் விலகும்.




கூட இருந்தே உங்களை கெடுக்க நினைத்த உறவினர்களின் உள்நோக்கத்தை இந்த வாரத்தில் தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அவர்களிடம் இருந்து விலகி இருப்பது மிகவும் நல்லது. சந்திரனின் இடப்பெயர்ச்சியும் அவ்வளவு சாதகமான நிலையில் இல்லை. முதலீட்டுக்கு தகுந்த வருமானம் கிடைப்பது சற்று சிரமம்.

புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். நடைபாதை வியாபாரிகள் சிறப்பான பலனை அடைவார்கள். கலை துறையினர் பிரபலமடைவார்கள். கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய் வழி சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. எவ்வளவு தான் இணக்கமாக நடந்தாலும் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் தாண்டவம் ஆடும்.




உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணும் கூட்டம் உங்களுக்கு ஆசை வார்த்தை சொல்லும். அதில் மயங்கி இருப்பதை இழந்து விடாதீர்கள். வளர்பிறை சந்திரன் நீங்கள் செய்யும் வியாபாரத்துக்குப் பல வகையில் உதவியாக இருப்பார். இருமடங்கு எச்சரிக்கையோடு எதையும் செய்யுங்கள். நல்ல நண்பர்களே விரோதியாக மாறி தொழிலுக்கு இடையூறு செய்வார்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலை சிறப்புடன் நடத்துவீர்கள். வேலைக்காக நீங்கள் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் சுணக்கம் உண்டாகும். அலைச்சல் அதிகமாகி உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் திரும்பி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஏதாவது வீட்டுச் செலவு வந்து பொருளாதார சிக்கலை உண்டாக்கும். வியாபாரம் மந்தமான நிலையில் நடக்கும்.




பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த இரவு பகலாக உழைப்பீர்கள். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்தி உற்பத்தி பெருக்கத்தை உண்டு பண்ணுவீர்கள். சந்திரனின் இடப்பெயர்ச்சிகள் சிறப்பான பலன்களையே தரப்போகின்றன. பழைய கடன்கள் மள மள என்று வசூல் ஆகும். சிறு வியாபாரிகள் அபிரிமிதமான லாபத்தை பார்ப்பார்கள். அலங்கார பொருள் விற்பனை அமோக பலனை கொண்டு வரும். கலைத்துறையினருக்கு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டில் தங்கள் திறமையை காட்டி பெரிய லாபத்தை அடைவார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் தொழிலில் சாதனை படைப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டி பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.10.2025




நடந்து செல்லும் இடமெல்லாம் நந்தவனமாக பூத்து சிரிக்கும் காலம் இது. எந்த தொழிலை தொட்டாலும் ஏற்றத்தை கொடுக்கும். உங்களின் செல்வாக்கும் புகழும் வெளியிடங்களில் கொடி கட்டி பறக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சந்திர பகவான் வியாபார வெற்றிக்கு உறுதுணையாக நிற்கிறார். விவசாய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்கறிஞர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் தங்களுடைய புகழை நிலை நாட்டுவார்கள். வேலை தேடியவர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும். சுப காரியங்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் விருந்த நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி பொங்கு வழியும்.




பூர்வீக சொத்தில் சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதற்காக நீதி மன்றத்தை நாடி செல்வதற்கான கட்டாயம் ஏற்படும். உலவுகின்ற நிலவும் உங்களுக்கு அனுசரணையாக இல்லாததால் எதிர்பாராத செலவுகள் வந்து கையில் இருந்த காசுக்கு வெடி வைக்கும். தொழில்துறைகள் சீராக நடக்கும். வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உண்டாகும். உறவினர் வகையில் ஏதாவது வில்லங்கம் வந்து மன அமைதியை கெடுக்கும். எப்படிப்பட்ட இடையூறுகள் தொழிலில் ஏற்பட்டாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அரசாங்க ஒப்பந்த வேலைகளில் கால தாமதமாகும். நண்பர்களின் உதவியால் வெளிநாடு செல்வீர்கள்.





யாருக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களோ அவர்களே உங்களை புரிந்து கொள்ளாமல் மனம் நோகும்படி நடந்து கொள்வார்கள். மிக கவனமாக செயல்பட வேண்டிய காலம். சின்ன சின்ன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சந்திர பகவான் நல்லது கெட்டது என கலந்து இந்த வாரத்தில் உங்களுக்கு பலனை கொடுப்பார். திட்டம் போட்டு செய்யும் தொழிலில் சில சறுக்கள் ஏற்படலாம். ஆசை வார்த்தை காட்டும் நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள ஆடம்பரமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்தில் தாமதம் இன்றி பணம் கிடைக்கும். தொழில் வேகமாக வளர்ச்சி அடையும். குடும்பத்தில் உங்கள் திறமையை காட்ட முயற்சி செய்தால் மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்கு சென்று விடுவார்.




கணவனின் வருமானம் அறிந்து மனைவிமார்கள் செலவு செய்ய வேண்டும். இல்லை என்றால் வட்டிக்கு கடன் வாங்கி திரும்ப செலுத்த இயலாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை உருவாகலாம். சந்திர பகவானின் அனுக்கிரகத்தால் தொழிலில் கணிசமான லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பார்ப்பீர்கள். உட்கார க்கூட நேரமில்லாமல் பொருளாதாரத்தைப் பெருக்க ஓயாது வேலை பார்ப்பீர்கள். கண்ட இடங்களில் சாப்பிட்டு வயிற்றை கெடுத்துக் கொள்ளாதீர்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடு விலகி சகசமான நிலை ஏற்படும். பெற்றோரின் மனநிலையில் புரிந்து பிள்ளைகள் நடந்து கொள்வார்கள். மங்கள காரியங்களால் வீட்டில் கலகலப்பு கூடும்.

# நீதிக்காகப் போராடிய அமரர் மனோகரனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில்




கடந்த 2006.01.02ஆம் திகதியன்று திருகோணமலை நகரத்தின் காந்தி சிலையருகில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களுக்கு நீதிகோரிப் போராடிவந்த, படுகொலையான மாணவரான ரஜிகரின் தந்தையார் மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் அவர்கள் அண்மையில் அமரத்துவமடைந்திருந்தார்.

அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம், தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மக்கள் செயல் தன்னார்வ அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வில், சாட்சியங்களோடு தொடர்பான உரைகளும் இடம்பெறவுள்ளன.

உரைகளின் வரிசையில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், 'சர்வதேச தலையீட்டின் கீழ் தமிழ் இனவழிப்புக்கு எதிரான சாட்சியங்களைத் திரட்டல் – சாத்தியமும் பலவீனங்களும்' என்ற தலைப்பிலும், யாழ்.பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறை தலைவர் கலாநிதி.தி.விக்கினேஸ்வரன் 'காணமலாக்கப்பட்டோருடன் தொடர்புடைய சாட்சியங்கள் பலவீனப்படுத்தப்படுகின்றமையும் அதற்குப் பின்னாலான அரசியலும்' என்ற தலைப்பிலும், அரசியல் செயற்பாட்டாளரான ரஜீவ்காந்த் 'மருத்துவர் மனோகரன் நடந்த நீதியின் தடம் – நடந்தவைகளும் நினைவுகளும்' என்ற தலைப்பிலும், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் 'பதினாறு ஆண்டுகால நீதிக்கான போராட்டம்' என்ற தலைப்பிலும், பத்திரிகையாளர் அ.நிக்சன் 'நீதிகோரலுக்கான சாட்சியங்களைப் பெறும் வழிமுறைகளும் அதனை மையப்படுத்திய நாடாளுமன்ற உரைகளும்' எனும் தலைப்பிலும், சட்டத்தரணி சிறீநாத் பெரேரா 'சர்வதேச நீதியினூடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைதல்' எனும் தலைப்பின் கீழும் உரையாற்றவுள்ளனர்.

நீதிக்காகப் போராடிய மாண்புமை மானுடன் அமரர் மனோகரனுக்கு அஞ்சலி செலுத்தவும், மிக நீண்ட இடை-வெளியின் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இவ் அரசியல் உரைகளில் கலந்துகொள்ளவும் அனைவரையும் அழைக்கின்றோம் என மக்கள் செயல் அமைப்பு தெரிவித்துள்ளது.